
# தினபூமி

thinaboomi.com

பூமி: 23 சுற்று: 199 ஆனி 02

புதுச்சேரி, திங்கள், ஜூன் 16, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00

**அமெரிக்காவை தாக்கினால் கடும் பதிலடி கொடுப்போம்: ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை**

...2-ம் பக்கம்

**அரசு பயணமாக புதுச்சேரி வந்தார் துணை ஜனாதிபதி: முதல்வர் ரங்கசாமி வரவேற்பு**

...3-ம் பக்கம்

**2023-2025 டெஸ்ட் சாம்பியன்ஷிப்: 9 அணிகள் பெற்ற பரிசுத்தொகை விவரங்களை வெளியிட்ட ஐ.சி.சி.**

...6-ம் பக்கம்





தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டம் கல்லணையிலிருந்து காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி குறுவை சாகுபடிக்காக தண்ணீரை திறந்து வைத்து மலர் மற்றும் நெல்மணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தூவினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், பாராளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கல்யாணசுந்தரம், எஸ்.முரசொலி, ஆர்.சுதா, டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், கலெக்டர் பிரியங்கா பங்கஜம் உடனிருந்தனர்.

### தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக

# திருச்சி கல்லணையை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

தஞ்சாவூர், ஜூன் 16-

**திருச்சி கல்லணையில் இருந்து பாசனத்திற்காக காவிரி நீரை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதன் மூலம் 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் மாவட்டங்கள் தோறும் சென்று அரசின் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து கள ஆய்வு செய்து வருகிறார். அரசின் திட்டங்கள் மக்களை சென்றடைவது பற்றி அரசு உயர் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்துவதோடு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார்.

அதன்படி 2 நாள் பயணமாக (15, 16-ந்தேதிகள்) தஞ்சை மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். தஞ்சை, திருச்சி, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து கடந்த 12-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தண்ணீர் திறந்து வைத்தார். மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட காவிரி நீர் கல்லணைக்கு நேற்று வந்து சேர்ந்தது.

இந்த நிலையில் டெல்டா மாவட்ட பாசனத்திற்காக கல்லணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதற்காக சென்னையில் இருந்து நேற்று காலை விமானம் மூலம் புறப்பட்டு திருச்சிக்கு பகல் 12.15 மணிக்கு சென்றார். அங்கு அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ்பொய்யாமொழி உள்ளிட்டோர் முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்றனர்.

வரவேற்பை பெற்றுக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் சாலை மார்க்கமாக காரில் கல்லணைக்கு சென்றடைந்தார். அங்குள்ள சுற்றுலா மாளிகையில் தங்கி இருந்த ஸ்டாலின், நேற்று மாலை 5 மணியளவில் கல்லணையை திறந்து வைத்தார். கல்லணையில் இருந்து டெல்டா மாவட்டங்களுக்கு காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் ஆறுகள் மூலம் காவிரி நீரை பகிர்ந்து அளிக்கும் வகையில் தண்ணீரை திறந்து விட்டு நெல்மணிகளை தூவினார். இதன் மூலம் 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடந்த 4 ஆண்டுகளில் மாணவர்கள்

# இடைநிற்றல் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியுள்ளோம்

## * முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்
## * விருதுநகர் ஆட்சியருக்கும் பாராட்டு

சென்னை, ஜூன் 16-

**கடந்த 4 ஆண்டுகளில் 'இடைநிற்றலே இல்லாத' மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியுள்ளோம் என்று பெருமிதம் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், இடைநிற்றல் மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்க கள ஆய்வு நடத்திய விருதுநகர் மாவட்ட ஆட்சியருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார். மேலும், 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்பதை உறுதி செய்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**மக்களுக்கு விழிப்புணர்வு**

விருதுநகர் மாவட்டத்தில் இடைநிற்றல் ஆன மாணவர்களை, மீண்டும் பள்ளியில் சேர்க்கும் வகையில் கள ஆய்வு செய்த ஆட்சியர் ஜெயசீலன், மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோருக்கு கல்வியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதுதொடர்பான வீடியோ அன்மையில் வெளியானது. இதனையடுத்து, மாவட்ட ஆட்சியரின் இந்த நடவடிக்கையை பலர் வெகுவாக பாராட்டினர்.

**ஆசிரியர்களுக்கு வாழ்த்து**

இது தொடர்பாக, முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்: வாழ்த்துகள் விருதுநகர் மாவட்ட ஆட்சியர், கடந்த 4 ஆண்டுகளில் 'இடைநிற்றலே இல்லாத' மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்தியுள்ளோம். இந்த நிலை தொடர அர்ப்பணிப்போடு பணியாற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் வாழ்த்துகள்.

**எடுத்துக் கூறுங்கள்....**

ஆசிரியர்களுக்கும், பொதுமக்களுக்கும் என் வேண்டுகோள்: இந்த இயக்கத்தில் நீங்களும் இணைய வேண்டும். உங்கள் பகுதியில், பள்ளி செல்லாத மாணவர்கள் இருந்தால் கண்டறியுங்கள். 'கல்வியை மிஞ்சிய செல்வம் எதுவும் இல்லை என அவர்களுக்கு உணர்த்துங்கள்.

காலை உணவுத் திட்டம், திறன்மிகு வகுப்பறைகள், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் என ஒவ்வொரு நிலையிலும் அவர்களைக் கைப்பிடித்து அழைத்துச் செல்ல அரசின் திட்டங்கள் இருப்பதை எடுத்துக் கூறுங்கள். கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்பதை உறுதிசெய்வோம் என்று முதல்வர் தனது பதிவில் கூறியுள்ளார்.

**ஆசிரியர்களுக்கும், பொதுமக்களும், பள்ளி செல்லாத மாணவர்கள் இருந்தால் கண்டறிந்து, 'கல்வியை மிஞ்சிய செல்வம் எதுவும் இல்லை என அவர்களுக்கு உணர்த்தி, காலை உணவுத் திட்டம், திறன்மிகு வகுப்பறைகள், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் என ஒவ்வொரு நிலையிலும் அவர்களை கைப்பிடித்து அழைத்துச்செல்ல அரசின் திட்டங்கள் இருப்பதை எடுத்துக்கூற வேண்டும்.**

**-முதல்வர் மு.க.ஸ்டாலின்**



### சைப்ரஸ் சென்றடைந்த

# பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு



புதுடெல்லி, ஜூன் 16-

8பிரதமர் மோடி தனது பயணத்தின் முதல் நாளாக நேற்று மத்திய கிழக்கு நாடான சைப்ரஸ் சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. இந்திய பிரதமர் ஒருவர் சைப்ரஸ் செல்வது கடந்த 20 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.

பிரதமர் மோடி அரசு முறை சுற்றுப்பயணமாக மேற்கு ஆசியாவில் கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள தீவு நாடானா சைப்ரஸ், கனடா மற்றும் குரேஷியா ஆகிய 3 நாடுகளுக்கு செல்கிறார். பிரதமர் மோடி தனது பயணத்தின் முதல் நாளாக நேற்று மத்திய கிழக்கு நாடான சைப்ரஸ் செல்கிறார். இதற்காக அவர் நேற்று காலையில் டெல்லியில் இருந்து விமானம் மூலம் சைப்ரஸ் புறப்பட்டார். சைப்ரஸ் நாட்டு அதிபரான நிகோஸ் கிறிஸ்டோடூலிட்ஸின் அழைப்பை ஏற்று பிரதமர் மோடி அங்கு செல்கிறார். சைப்ரஸ் சென்ற பிரதமர் மோடிக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இன்று வரை அங்கே இருக்கும் பிரதமர் மோடி, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

சைப்ரஸ் நாட்டு தலைநகர் நிகோசியாவில் அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடூலிட்சை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார். மேலும் லிமாசோல் நகரில் நடைபெறும் வர்த்தக மன்றத்திலும் சிறப்புரையாற்றுகிறார். இந்திய பிரதமர் ஒருவர் சைப்ரஸ் செல்வது கடந்த 20 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். சைப்ரஸ் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி இன்று கனடா புறப்படுகிறார். 17-ந் தேதி வரை அங்கே இருக்கும் பிரதமர் மோடி, கனடாவின் கனனாஸ்கிஸ் நகரில் நடைபெறும் ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இந்த மாநாட்டுக்கு இடையே ஜி-7 நாடுகளின் தலைவர்களுடன் தனித்தனி சந்திப்புகளை நடத்தி இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்க உள்ளார். வளர்ந்த நாடுகளின் கூட்டமைப்பான ஜி-7 அமைப்பின் உச்சி மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக பிரதமர் மோடி தொடர்ந்து 6-வது முறையாக பங்கேற்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் கனடா பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி 18-ம் தேதி ஐரோப்பிய நாடான குரேஷியா செல்கிறார். அந்த நாட்டு பிரதமர் ஆண்ட்ரெஜ் பிளன்கோவிச் அழைப்பின் பேரில் செல்லும் பிரதமர் மோடி, அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இந்திய பிரதமர் ஒருவர் குரேஷியா செல்வது இதுவே முதல் முறையாகும்.

### மத்திய கிழக்கில் உச்சக்கட்ட போர்ப்பதற்றம்: 4-வது நாளாக

# இஸ்ரேல்-ஈரான் இடையே கடும் சண்டை

## * டெஹ்ரானில் பற்றி எரியும் எண்ணெய் கிடங்கு
## * ஜெருசலேம், டெல் அவிவ் நகரங்களில் சேதம்



டெஹ்ரான், ஜூன் 16-

**இஸ்ரேல் - ஈரான் இடையே 4-வது நாளாக தொடர்ந்த தீவிர மோதலால் மத்திய கிழக்கில் உச்சக்கட்ட போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதலால் டெஹ்ரானில் எண்ணெய் கிடங்குகள் பற்றி எரிகின்றன. ஈரானின் அணுசக்தி கட்டமைப்புகள் மற்றும் ராணுவத் தளங்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல் மற்றும் ஈரானின் பதிலடி தாக்குதலால் மத்திய கிழக்கில் பெரும் போர்ப்பதற்றம் நிலவுகிறது. ஈரானின் பதில் தாக்குதலால் ஜெருசலேம், டெல் அவிவ் போன்ற நகரங்களில் நடந்த தாக்குதலில் பெரும் சேதம் விளைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.**

முன்னதாக ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாக்களுக்கு ஆதரவாக கடந்த ஆண்டு இஸ்ரேலை தாக்கிய ஈரான், இஸ்ரேலுக்கு எதிராக அணுகுண்டுகளை தயாரித்து வருவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகிறது. அப்படி அணு ஆயுத பலம் பொருந்திய ஈரான், தங்கள் இருத்தலுக்கு எப்போதும் அச்சுறுத்தல் என கருதி வரும் இஸ்ரேல், ஈரானின் அணு ஆயுத தளங்கள் அனைத்தையும் தகர்க்க திட்டமிட்டது.

இதற்காக ஈரான் மீது கடந்த 3 தினங்களுக்கு முன் அதிகாலையில் இருந்து இஸ்ரேல் அதிரடி தாக்குதலை தொடங்கியது. தங்களை தற்காத்துக்கொள்ள நடத்தப்படும் முன்கூட்டிய தாக்குதல் இது என அறிவித்த இஸ்ரேல், இந்த ராணுவ நடவடிக்கைக்கு 'ஆபரேஷன் ரைசிங் லயன்' என பெயரிட்டு இருந்தது. ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகள் வைக்கப்பட்டிருக்கும் ராணுவ தளங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளை இஸ்ரேலின் போர் விமானங்கள் துல்லியமாக தாக்கின.

குறிப்பாக ஈரான் தலைநகர் டெஹ்ரான் மற்றும் அதைச்சுற்றி உள்ள பகுதிகள், மேலும் முக்கிய அணுசக்தி மையமான நட்டன்ஸ், இஸ்பகான் உள்பட பல அணுசக்தி மையங்கள் தகர்க்கப்பட்டன. 200-க்கு மேற்பட்ட விமானங்கள் மற்றும் டிரோன்கள் மூலம் நடத்திய இந்த நாசகார தாக்குதலில் 78 பேர் கொல்லப்பட்டனர். 320 பேர் காயமடைந்ததாக ஐ.நா.வுக்கான ஈரான் தூதர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் இஸ்ரேலின் முக்கிய ராணுவ தளபதிகள் பலரும் அடங்குவர். குறிப்பாக ஈரானின் ஆயுதப்படைகள் தலைவர் முகமது பகேரி, துணை ராணுவப்படையான புரட்சிகர படைத்தளபதி உசேன் சலாமி உள்பட பல தளபதிகளும் கொல்லப்பட்டனர். மேலும் ஏராளமான அணு விஞ்ஞானிகளும் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலின் இந்த திடீர் தாக்குதல் உலக அரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

இந்நிலையில் இஸ்ரேலின் இந்த அதிரடிக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் அறிவித்தது. 'அவர்கள் செய்த இந்தப் பெரிய குற்றத்தில் இருந்து அவர்கள் தப்பிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்' என்று ஈரான் உச்சபட்ச தலைவர் அயத்துல்லா அலி காமெனி அறிவித்திருந்தார். அவர் அறிவித்த சில மணி நேரத்திலேயே ஈரானும் பதிலடி கொடுத்தது. அதன்படி 200-க்கு மேற்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் 100-க்கு மேற்பட்ட டிரோன்களை நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து அலை அலையாக இஸ்ரேலுக்குள் செலுத்தியது.

இவற்றை நடுவானில் இடைமறித்து அழித்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. ஆனாலும் சில ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் இஸ்ரேலின் பலம் பொருந்திய அயர்ன் டோம் வான் பாதுகாப்பு அமைப்பையும் உடைத்துக்கொண்டு பல இடங்களை தாக்கியது. குறிப்பாக ஜெருசலேம், டெல் அவிவ் போன்ற நகரங்களில் நடந்த தாக்குதலில் பெரும் சேதம் விளைந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பகுதிகளில் ஏராளமான கட்டிடங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் சேதமடைந்து உள்ளன. பல இடங்களில் வெடிப்பு சத்தங்களும், கரும்புகை வெளியேறும் காட்சிகளும் ஊடகங்களில் வெளியாகி உள்ளன.

ஈரானின் இந்த பதிலடியில் 3 பேர் கொல்லப்பட்டதாகவும், 70-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. பல இடங்களில் வான் தாக்குதலுக்கான அலாரம் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தன. இந்த தாக்குதலை தொடர்ந்து மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு இஸ்ரேல் அறிவுறுத்தியது. பல இடங்களில் ஈரானின் தாக்குதலை அமெரிக்க தயாரிப்பு வான்பாதுகாப்பு அமைப்புகள் முறியடித்ததாக அமெரிக்க ராணுவ அதிகாரிகள் சிலர் கூறினர்.

ஈரான் மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதல் மற்றும் ஈரானின் பதில் தாக்குதல், தீவிர போராக உருமாறும் வாய்ப்பு இருப்பதாக உலக நாடுகள் அச்சம் வெளியிட்டு உள்ளன. ஈரான் மீதான

(கடைசி பக்கம் பார்க்க)


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -573.38 | -169.60 |
| பாயின்ட் 81,118.60 | பாயின்ட் 24,718.60 |



**தங்கம்**
1 சவரன் ₹74,560
1 கிராம் ₹9,320



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹86.25

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# அமெரிக்காவை தாக்கினால் கடும் பதிலடி கொடுப்போம்

## ஈரானுக்கு அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஜூன் 16-**

அமெரிக்காவை ஈரான் குறிவைத்து தாக்குதல் நடத்தினால் கடும் பதிலடி கொடுப்போம் என அதிபர் டிரம்ப் கடுமையாக எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல்-ஈரான் இடையே மோதல் உச்சத்தை எட்டியுள்ளது. இரு நாடுகளும் ஏவுகணை தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. இந்த தாக்குதலில் ஈரானில் 80 பேரும், இஸ்ரேலில் 4 பேரும் உயிரிழந்தனர். இதனால் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் இருப்பதாக



சொல்லப்படும் நிலையில், ''இஸ்ரேல் தாக்குதலில் அமெரிக்கா பங்கு இல்லை. அமெரிக்காவை ஈரான் குறிவைத்து தாக்குதல் நடத்தினால் கடும் பதிலடி கொடுப்போம்'' என டிரம்ப் எச்சரித்து உள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியதாவது, அமெரிக்காவை ஈரான் தாக்கினால் இதற்கு முன் கண்டிராத அளவுக்கு மோசமான விளைவுகளை ஈரான் சந்திக்க நேரிடும். ஈரான் மீதான தாக்குதலுக்கும், அமெரிக்காவுக்கும் எந்த தொடர்பும் இல்லை. எந்த வகையிலும், வடிவிலும் ஈரான் தாக்கினால் அமெரிக்க ஆயுதப் படை முழு பலத்துடன் களமிறங்கும். இருப்பினும், ஈரானுக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தத்தை எளிதாகச் செய்ய, இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவர முடியும்'' என்றார்.

## பாக்., ராணுவ தளபதிக்கு அழைப்பா?

# அமெரிக்கா வெள்ளை மாளிகை மறுப்பு

**வாஷிங்டன், ஜூன் 16-**

அமெரிக்காவின் 250வது ஆண்டு ராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீரை சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளதாக வெளியான தகவலை வெள்ளை மாளிகை மறுத்துள்ளது.

வாஷிங்டன்னில், 250ம் ஆண்டு ராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீரை அமெரிக்கா சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளதாக தகவல் வெளியானது. மேலும், டிரம்ப் பிறந்த நாள் கொண்டாட்டத்திலும் பங்கேற்கும் வகையில் அசிம் முனீர் இந்த வாரம் அமெரிக்கா செல்ல இருந்ததாக கூறப்பட்டது. இதனையடுத்து மத்திய அரசு மீது காங்கிரஸ் விமர்சனம் வைத்தது.

இது தொடர்பாக அக்கட்சி மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், தூதரக ரீதியில் இந்தியாவுக்கு பின்னடைவு ஏற்பட்டு உள்ளது. பஹல்காம் தாக்குதலுக்கு முன்பு, அசிம் முனீர் தான் அத்துமீறும் வகையில் பேசினார். அமெரிக்காவின் நோக்கம் என்ன என கேட்டு இருந்தார். இதற்கு பதிலடி கொடுத்த பா.ஜ., '' பொய்ச் செய்திகளை பரப்புவதை காங்கிரஸ் நிறுத்த வேண்டும் '' எனக்கூறியிருந்தது. இதனை வெள்ளை மாளிகை அதிகாரிகள் மறுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் கூறுகையில், இந்த செய்தி தவறானது. எந்த வெளிநாட்டு ராணுவ தளபதிகளையும் அழைக்கவில்லை என தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## இஸ்ரேல் - ஈரான் போர் எதிரொலி:

# கச்சா எண்ணெய் விலை உயர வாய்ப்பு

**டெல்அவீவ், ஜூன் 16-**

இஸ்ரேல், ஈரான் ஆகிய இரு நாடுகளும் பரஸ்பரம் தீவிர தாக்குதல் நடத்தி வருவதால் கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் ஒரே நாளில் 2 முறை தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக, அந்நாட்டின் தலைநகர் ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் உட்பட பல நகரங்கள் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில், இஸ்ரேல் ராணுவ தலைமையகம் உட்பட பல கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, இரு நாடுகளுக்கும் இடையே போர் வலுத்துள்ளது. ஈரான் மீதான தாக்குதலை இஸ்ரேல் தொடர்ந்துள்ள நிலையில், இஸ்ரேல் மீது ஈரானும், ஹவுதி கிளர்ச்சிப் படையும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இவ்வாறாக இஸ்ரேல், ஈரான் ஆகிய இரு நாடுகளும் பரஸ்பரம் தீவிர தாக்குதல் நடத்தி வருவதால், இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் விலை நேற்று முன்தினம் ஒரே நாளில் பேரலுக்கு 6 டாலர் உயர்ந்து 78 டாலரானது. இதன்மூலம் கடந்த 5 மாதங்களுக்கு முன்பு இருந்த நிலைக்கு சென்றது. எனினும், இறுதியில் 74 டாலராக நிறைவடைந்தது. இந்த போர் தீவிரமானால் கச்சா எண்ணெய் விலை மேலும் உயரும் என தெரிகிறது.

இது குறித்து எஸ் அன்ட் பி குளோபல் தலைவர் ரிச்சர்டு ஜோஸ்விக் கூறும் போது, "இஸ்ரேல் - ஈரான் போரால் கச்சா எண்ணெய் விலை உயர வாய்ப்பு உள்ளது. ஆனால், ஏற்றுமதி பாதிக்கப்படுமா என்பது தான் முக்கியம். கடந்த முறை ஈரானும் இஸ்ரேலும் மாறி மாறி தாக்குதல் நடத்தியபோது, கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. பின்னர், போர் தீவிரமடையவில்லை என்றும், எண்ணெய் விநியோகம் பாதிக்கப்படவில்லை என்றும் தெரிந்தவுடன் அவற்றின் விலை சரிந்தது.'' என்றார்.

உலக அளவிலான கச்சா எண்ணெய் சரக்கு போக்குவரத்தில் 20% ஈரானுக்கு வடக்கே உள்ள ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக நடைபெறுகிறது. ஈராக், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## ஈரானுடன் கூட்டு சேர்ந்து

# இஸ்ரேலை தாக்கிய ஹவுதி படை

**தெஹ்ரான், ஜூன் 16-**

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஈரானுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டனர். முதல் முறையாக ஒருங்கிணைந்து இஸ்ரேலை தாக்குவதாக ஹவுதி படையினர் வெளிப்படையாக அறிவித்துள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமையகம், எரிசக்தி உற்பத்தி மையங்களை குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டது. பதிலுக்கு ஈரான் தரப்பு மேற்கொண்ட ஏவுகணை தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் 3 பேர் உயிரிழந்தனர். இதை இஸ்ரேல் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இருதரப்புக்கு இடையே மோதல் தொடர்கின்ற காரணத்தால் அணுசக்தி திட்டம் தொடர்பாக ஈரான் மற்றும் அமேரிக்கா இடையிலான பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டது. இஸ்ரேல் - ஈரான் மோதல் எப்போது முடிவுக்கு வரும் என்ற கேள்வியும் இப்போது எழுந்துள்ளது. உலகத் தலைவர்கள் இந்த மோதல் கூடாது என வலியுறுத்தி உள்ளனர்.

ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஈரானுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டனர். முதல் முறையாக ஒருங்கிணைந்து இஸ்ரேலை தாக்குவதாக ஹவுதி படையினர் வெளிப்படையாக அறிவித்துள்ளனர். இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடி தரும் வகையிலும், ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மற்றும் ஈரான் மக்களின் தரப்பில் இருந்து ஈரான் ராணுவ நடவடிக்கைக்கு உறுதுணையாக இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டோம் என ஹவுதி செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலை ஹவுதி படையினர் மேற்கொண்டனர்.

# நைஜீரியாவில் துப்பாக்கிச்சூடு: 100 பேர் பலி

**அபுஜா, ஜூன் 16-**

நைஜீரியாவின் மத்திய பெனுவே மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 100 பேர் கொல்லப்பட்டு உள்ளனர்.

நைஜீரியாவின் மத்திய பெனுவே மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் மர்ம நபர்கள் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 100 பேர் கொல்லப்பட்டனர். பலர் மாயம் ஆகி உள்ளனர். 20க்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்தனர். இவர்கள் போதுமான மருத்துவ வசதி இல்லாமல் அவதி அடைந்து வருகின்றனர்.

இந்த பதட்டங்கள் பெரும்பாலும் இன மற்றும் மதப் பிளவுகளால் மோசமடைகின்றன. கடந்த மாதம், நைஜீரியாவின் க்வெர் வெஸ்ட் மாவட்டத்தில் வார இறுதி நாட்களில் நடந்த தொடர் தாக்குதல்களில் குறைந்தது 42 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த 2019ம் ஆண்டு முதல் இதுவரை நடந்த துப்பாக்கிச்சூட்டில் 500 பேர் உயிரிழந்தனர். 22 லட்சத்திற்கு அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்தில் பயங்கரம்:

# ஒரே இரவில் 30 ஆயிரம் முறை மின்னல் தாக்குதல்

**லண்டன், ஜூன் 16-**

இங்கிலாந்தில் ஒரே இரவில் 30 ஆயிரம் முறை மின்னல் தாக்கியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்தது. மேற்கு நகரமான சல்போல்கில் 30 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்தியது. இது இந்த ஆண்டின் அதிகபட்ச வெயில் அளவு ஆகும். இந்த நிலையில் தலைநகர் லண்டன், சபோல்க் ஆகிய நகரங்களில் மழை கொட்டித்தீர்த்தது. இதனால் அந்த நகரங்கள் வெள்ளக்காடாக மாறின. எனவே வெள்ளம் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்பு பணி நடைபெற்று வருகிறது.

அதேசமயம் மழை பெய்தபோது ஒரே இரவில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறை மின்னல் தாக்கியதாக பதிவானது. அவற்றில் பல மின்னல்கள் கடல் பகுதியில் பதிவாகின.எனவே இங்கிலாந்தின் வடக்கு பிராந்தியத்தில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனை தொடர்ந்து அயர்லாந்து, ஸ்காட்லாந்திலும் கனமழை பெய்வதற்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே மின்னல் தாக்கியதில் அங்கு காட்டுத்தீயும் ஏற்பட்டது. தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து சென்று தண்ணீரை பீய்ச்சியடித்தனர். அவர்களது சில மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அதேபோல் மின்னல் காரணமாக விமானம் தரையிறங்குவதில் சிக்கல் நிலவியது. எனவே லண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்தில் பல விமானங்கள் தாமதமாக வந்து சென்றன.

## ரபேல் விமானங்களை வீழ்த்தியதா பாக்.,?

# டசால்ட் நிறுவனம் மறுப்பு

**பாரிஸ், ஜூன் 16-**


ஆபரேஷன் சிந்தூரின் போது ரபேல் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக பாகிஸ்தான் கூறியது பொய் என்று டசால்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்திய ராணுவம் மேற்கொண்டது. ஆபரேஷன் சிந்தூர் வெற்றி பெற்றதை பலரும் கொண்டாடினர். ஆனால் பாகிஸ்தான் மட்டுமே இந்தியாவின் ரபேல் போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக கூறிக் கொண்டே இருந்தது. இது பொய்யான தகவல் என்று மத்திய அரசு அப்போதே மறுத்துவிட்டது.

இந்நிலையில் ரபேல் போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக பாகிஸ்தான் கூறியது பொய் என்று ரபேல் விமானங்களை உற்பத்தி செய்யும் டசால்ட் நிறுவன முதன்மை செயல் அதிகாரி எரிக் டிராப்பியர் தெரிவித்துள்ளார்.பிரான்ஸில் இதழ் ஒன்றுக்கு அவர் பேட்டி அளிக்கையில் இதை தெளிவுப்படுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது;டசால்ட் நிறுவனத்திற்கு இந்திய விமானப்படையிடம் இருந்து போர் விமானங்கள் அழிக்கப்பட்டதாக எந்த அதிகாரப்பூர்வ தகவலும் எங்களுக்கு வரவில்லை. 3 ரபேல் போர் விமானங்களை தாக்கி அழித்ததாக பாகிஸ்தான் கூறுவது தவறானது என்று எங்களுக்கு ஏற்கனவே தெரியும். இவ்வாறு அவர் கூறினார்.

**16-06-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வேலைக்கான நேர்காணல்களில் வெற்றி கிடைக்கும். கீழே பணிபுரிபவர்களுக்கு கட்டளையிடும் உயர் பதவி கிடைக்கும். அரசு ஆதரவு இருக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்:-** தெய்வ சிந்தனை அதிகரிக்கும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், குளம் போன்ற திருப்பணிகளில் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும். உல்லாசப் பயணங்கள் மூலம் சந்தோஷம் நிலவும்.

**மிதுனம்:-** அனைத்து விஷயங்களிலும் எச்சரிக்கையாக இருக்கவும். அனைவருக்கும் நல்லதே நினைக்கும் எண்ணத்தைக் கைக்கொள்வது நல்லது உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**கடகம்:-** புதியன கற்பதில் ஈடுபாடு அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்க திட்டமிடுவீர்கள். சுவையான உணவுகளை ருசித்து மகிழ்வீர்கள். அரசாங்கத்திடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக நடக்கும்.

**சிம்மம்:-** அனைத்து நலன்களும் உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து ஏற்றம் தரும். உதவிக்கரம் நீட்டுவர் நண்பர்கள். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும். புகழும் உண்டாகும்.

**கன்னி:-** குழந்தைகள் உடல் நிலையில் அக்கறை தேவை. அனைவருடனும் சுமுகமாகப் பழகி, அமைதியாக நடந்தால் எதிர்ப்புகள் குறையும். எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் ஏளனமே மிஞ்சும்.

**துலாம்:-** வியாபாரத்தில் தனவரவுகள் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. தேவையற்ற சிந்தனைகள் படுத்தவுடன் தூக்கம் வராது. தாயின் ஆரோக்கியம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:-** அனைத்து காரியங்களிலும் கை கொடுப்பாள் மனைவி. குழந்தைகள் மேல் பாசம் பொழிவார்கள். அரசு ஆதரவால் தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும். ஆடை ஆபரணங்கள் சேரும்.

**தனுசு:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, குடும்ப சுகம் ஆகியவை குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம்.

**மகரம்:-** அனைத்து விஷயங்களிலும் மனத்திருப்தி ஏற்படும். புத்தி சாதுர்யமும், வாக்கு வன்மையும் ஓங்கும். இனிய பயணங்களால் இன்பம் பெருகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் நிலவும்.

**கும்பம்:-** இடமாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**மீனம்:-** காரியம் அனைத்திலும் வெற்றி கிட்டும். எதிர்பார்த்த அரசு உதவிகள் தாமதமின்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்படும். பதவி மற்றும் அந்தஸ்து உயர்வு ஏற்படும்.

## உழைப்பின் வழிகாட்டி:

# தந்தையர் தினத்தில் இ.பி.எஸ். வாழ்த்து

**சென்னை, ஜூன் 16-**

தந்தையர் தினத்தை முன்னிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் தந்தையர்களை கவுரவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு உலக தந்தையர் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. தந்தையர் தினம் ஒவ்வொருவரின் வாழ்விலும் அவர்களது தந்தையின் பங்களிப்புகள், கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை கவுரவிக்



கும் நாளாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் தந்தையர் தினத்தை முன்னிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:- தந்தையர் தினத்தை முன்னிட்டு, பிள்ளைகளை அன்போடு வளர்த்து, உழைப்பின் மூலம் வழிகாட்டி, தன் குடும்பத்தின் அடித்தளமாய்த் திகழும் அனைத்து உண்மையான "அப்பா"க்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் கொள்கைத் தந்தைகளாக, இன்றளவும் நம்மை வழிநடத்தும் தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய ஒப்பற்ற தலைவர்களுக்கும் இந்நாளில் எனது புகழ் வணக்கத்தை செலுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.


## அகமதாபாத் விமான விபத்து:

# அடையாளம் காணப்பட்ட குஜராத் முன்னாள் முதல்வர் ரூபானி உடல்

**அகமதாபாத், ஜூன் 16-**

ஜூன் 12 அன்று அகமதாபாத்தில் நடந்த ஏர் இந்தியா விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியின் உடல் டிஎன்ஏ சோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதுகுறித்து பேசிய குஜராத் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்வி, "ஜூன் 12 ஆம் தேதி அகமதாபாத்தில் நடந்த ஏர் இந்தியா விமான விபத்தில் முன்னாள் குஜராத் முதல்வர் விஜய் ரூபானி உயிரிழந்தார். நேற்று காலை சுமார் 11:10 மணியளவில்



அவரது டிஎன்ஏ பொருந்தியுள்ளது. அவர் பல ஆண்டுகளாக குஜராத் மாநில மக்களுக்காக உழைத்தார்.'' என்று தெரிவித்தார்.

முன்னதாக, அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த 241 பேரில் விஜய் ரூபானியும் ஒருவர் என்ற செய்தியை மத்திய ஜல் சக்தி அமைச்சரும், குஜராத் பாஜக தலைவருமான சி.ஆர். பாட்டீல் உறுதிப்படுத்தினார். அவர், "இது மிகவும் சோகமான சம்பவம். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் என் இரங்கல். முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியை விபத்தில் இழந்துவிட்டோம், இது பாஜக குடும்பத்திற்கு மிகவும் வருத்தமளிக்கிறது.'' என்று கூறினார்.

# திருவனந்தபுரத்தில் அவசரமாக தரையிறங்கிய போர் விமானம்..!

**திருவனந்தபுரம்,ஜூன் 16-**

பிரிட்டனுக்கு சொந்தமான எப்-35 போர் விமானம் திருவனந்தபுரத்தில் அவசரமாக தரையிக்கப்பட்டது. விமானத்தில் எரிபொருள் குறைவாக இருந்ததால் அவசரமாக தரையிறக்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரிட்டீஷ் கடற்படைக்கு சொந்தமான கப்பலில் இருந்து புறப்பட்ட எப் 35 போர் விமானம், அரபிக்கடலில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போது விமானத்தில் எரிபொருள் குறைவாக இருப்பதையும், மீண்டும் போர்க்கப்பலுக்கு செல்வதற்கு போதுமானதாக இருக்காது என்பதையும் விமானி உணர்ந்தார்.



வேறு வழியில்லாத சூழலில், அருகேயுள்ள திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தரை இறங்குவதற்கு அனுமதி கோரினார். இதை பரிசீலனை செய்த மத்திய அரசு, உடனடியாக அனுமதி வழங்கியது. இதையடுத்து நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் போர் விமானம் திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. விமானம் தற்போது எரிபொருள் நிரப்ப மத்திய அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறது. இந்த விமானம், வளைகுடா பிராந்தியத்தில் தற்போது நிலவி வரும் அமைதியற்ற சூழலை கருத்தில் கொண்டும், கடற்கொள்ளையர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

# புதுச்சேரி சட்டசபை தேர்தலில் தி.மு.க. 20 இடங்களில் போட்டி

## எதிர்க்கட்சித்தலைவர் தகவல்

**புதுச்சேரி, ஜூன் 16-**

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 30 தொகுதிகளில் தி.மு.க.வுக்கு 20 இடமும், கூட்டணிக் கட்சிகளுக்கு 10 தொகுதிகளும் ஒதுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சிவா கூறியுள்ளார்

புதுவை மாநில உருளையன் பேட்டை தொகுதியின், தி.மு.க. "செயல் வீரர்கள்'' மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில அமைப்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சிவா பேசியதாவது: "

முதல்வர் மாநில அந்தஸ்து கேட்பார். ஆனால் தட்டாஞ்சாவடியை தாண்டி எங்கும் செல்ல மாட்டார். பிரதமரையோ, உள்துறை அமைச்சரையோ சென்று சந்திக்க மாட்டார். டெல்லி சென்று கதவை தட்டினால் தானே கிடைக்கும். இந்த ஆட்சியில் 423 ரெஸ்டோ பார்கள் அனுமதி கொடுக்கப்பட்டு அங்கெல்லாம் மெல்லிசை நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஒரே ஒரு தொழிற்சாலை கூட வரவில்லை.

2026 தேர்தலில் புதுச்சேரியிலுள்ள 30 தொகுதிகளில் 20 தொகுதிகளை தி.மு.க.வுக்கு கேட்டுப் பெற முடிவு செய்துள்ளோம். கூட்டணி கட்சிகளுக்கு 10 தொகுதிகளை தர உள்ளோம். கட்சி வளர்ச்சிக்காக இந்த தொகுதியில் நாங்கள் போட்டியிடுவோம் என்று கூட்டணி கட்சியினர் பேசுவர். அது அவர்களது உரிமை. அதற்காக அவர்களிடம் சங்கடப்பட்டு நிற்காதீர்கள். கூட்டணி கட்சியினரை தற்போது உதாசீனப்படுத்திவிட்டு தேர்தல் நேரத்தில் சென்று நிற்காதீர்கள்.

அவர்களிடம் தற்போது இருந்தே தொடர்பில் இருங்கள். மாநில அந்தஸ்து தொடர்பாக ஒரு கருத்தரங்கம் நடத்த உள்ளோம். மேலும், மாணவர்களுக்காக ஒரு நிகழ்ச்சியும் நடத்த உள்ளோம். அத்துடன் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை அழைத்து ஒரு நிகழ்ச்சியும் நடத்த உள்ளோம். இனி கட்சிப் பணி படு பிஸியாகத் தான் இருக்கும். அனைவரும் சிறப்பாக பணியாற்றி 2026-ல் கழக ஆட்சியை புதுச்சேரியில் கொண்டு வர வேண்டும்'' என்று எதிர்க்கட்சித் தலைவர் சிவா கூறியுள்ளார்.

# போலீஸ் எஸ்.பி. திடீர் ராஜினாமா

**சென்னை, ஜூன் 16-**

போலீஸ் எஸ்.பி. அருணின் ராஜினாமா கடிதத்தை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆயுதப்படை பிரிவில் 12-வது பட்டாலியன் கமாண்டன்டாக இருப்பவர் அருண். இவர் திடீரென்று தனது பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்து, ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி. ஜெயராமுக்கு கடிதம் எழுதினார். இந்தக் கடிதம், டி.ஜி.பி. சங்கர் ஜிவால் மூலம், உள்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த ராஜினாமா கடிதத்தை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதைத் தொடர்ந்து போலீஸ் துறையில் இருந்து விடுவிக்கப்பட்டதற்கான கடிதம் அவரிடம் வழங்கப்பட்டது. அருண் மதுராந்தகத்தைச் சேர்ந்தவர். கடந்த 2013-ம் ஆண்டு குரூப் 1 தேர்வு மூலம் டி.எஸ்.பி.யாக பணியில் சேர்ந்தார். 2024-ல் எஸ்.பி.யாக பதவி உயர்வு பெற்றார்.

### நவீன தமிழ்நாட்டை செதுக்கியவர்:
# தந்தையர் தினத்தில் கருணாநிதி குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**சென்னை, ஜூன் 16-**

தந்தையர் தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது தந்தை கருணாநிதியை நினைவுகூர்ந்து பதிவிட்டுள்ளார்.

உலகம் முழுவதும் தந்தையர்களை கவுரவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு உலக தந்தையர் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. தந்தையர் தினம் ஒவ்வொருவரின் வாழ்விலும் அவர்களது தந்தையின் பங்களிப்புகள், கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை கவுரவிக்கும் நாளாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் தந்தையர் தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது தந்தையும், தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வருமான கருணாநிதியை நினைவுகூர்ந்து பதிவிட்டுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "தலைவராக வழிகாட்டிய தந்தை! தந்தையாக நவீனத் தமிழ்நாட்டைச் செதுக்கிய தலைவர்!" என்று பதிவிட்டுள்ளார்.

# ராமதாசிடம் மன்னிப்பு கோரினார் அன்புமணி..!

**சென்னை, ஜூன் 16-**

அன்புமணி ராமதாஸ் தலைமையில் பாமக பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் ராமதாசிடம், அன்புமணி பகிரங்க மன்னிப்பு கோரினார்.

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அன்புமணி ராமதாசுக்கு இடையே கடந்த சில வாரங்களாக கருத்து மோதல் நடந்து வருகிறது. இதுஒருபுறம் இருக்க டாக்டர் ராமதாஸ் கட்சியில் சரியாக செயல்படாதவர்களையும், டாக்டர் அன்புமணி ராமதாசின் ஆதரவாளர்களையும் கட்சியில் இருந்து நீக்கி புதிய பொறுப்பாளர்களை நியமனம் செய்து வருகிறார்.

இந்த நிலையில், திருவள்ளூர் மணவாள நகரில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தலைமையில் பாமக பொதுக்குழு கூட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. பொதுக்குழு கூட்டத்தில் வழக்கறிஞர் பாலு, திலகபாமா, மாநில, மாவட்ட மற்றும் ஒன்றிய பாமக நிர்வாகிகள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

கூட்டத்தில் அன்புமணி ராமதாஸ் பேசியதாவது:- திருவள்ளூரில் முப்போகம் விளையும் 1,200 ஏக்கர் நிலத்தை பறித்து அமெரிக்க நிறுவனத்திற்கு தாரைவார்க்க தி.மு.க. அரசு துடிக்கிறது. ஏன் அந்த அமெரிக்க நிறுவனத்திற்கு தரிசு நிலம் அதிகம் உள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் நிலத்தை தி.மு.க. அரசு ஒதுக்கலாமே?. தி.மு.க. ஆட்சி முடிவுக்கான கவுன்டவுன் தொடங்கிவிட்டது.

சமூகநீதிக்காக பாமகவை தொடங்கிய ராமதாஸ் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளார். சமூகநீதி பற்றி பேச முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அதிகாரம் இல்லை. சமூகநீதியின் துரோகி தி.மு.க.. கட்சியில் உறுப்பினர் சேர்க்கையை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். 2026ல் பாமக அங்கம் வகிக்கும் கூட்டணிதான் தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும். அதற்காக தொண்டர்கள் பாடுபட வேண்டும். தமிழகத்தை ஆள தகுதியான ஒரே கட்சி பாமக.

ராமதாசுக்கு தந்தையர் தின வாழ்த்துகள். என் மீது ஏதும் கோபம் இருந்தால் ஐயா ராமதாஸ் என்னை மன்னித்து விடுங்கள். தந்தையிடம் மன்னிப்பு கேட்பது ஒன்றும் பெரிதல்ல. ராமதாஸ் ஐயா நீண்ட ஆயுளுடன், 100 ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். தேசிய தலைவர்; நாட்டின் மூத்த அரசியல் தலைவர் ராமதாஸ்.

ராமதாஸ் ஐயா டென்ஷன் ஆக வேண்டாம். வருத்தப்படாதீர்கள், நீங்கள் உருவாக்கிய கட்சி இது; நீங்கள் கோபப்படக்கூடாது. கடினமான காலங்களை கடந்து வந்தவர், பல தியாகங்களை செய்தவர் ராமதாஸ். என்ன செய்ய வேண்டும் என கூறுங்கள்; மகனாக நான் செய்கிறேன். என்று கூறினார்.

### 3 நாட்கள் அரசு பயணமாக
# புதுச்சேரி வந்தார் துணை ஜனாதிபதி: ஆளுநர், முதல்வர் ரங்கசாமி வரவேற்பு

**புதுச்சேரி, ஜூன் 16-**



துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர், புதுச்சேரிக்கு 3 நாட்கள் அரசு பயணமாக நேற்று (ஞாயிற்றுக் கிழமை) மதியம் வந்தடைந்தார். அவரை ஆளுநர், முதல்வர் வரவேற்றனர்.

டெல்லியில் இருந்து புதுச்சேரி லாஸ்பேட்டை விமான நிலையத்துக்கு நேற்று மதியம் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் வந்தடைந்தார். அவரை துணை நிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் செல்வம் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றனர்.

சுற்றுப்பயணம் வந்துள்ள ஜெகதீப் தன்கர், கடற்கரைச் சாலையில் உள்ள நீதிபதிகள் விருந்தினர் மாளிகையில் தங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. "தேசத்தைக் கட்டியெழுப்புவதில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை" என்ற நிகழ்ச்சி இன்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஏ.பி.ஜே.அப்துல் கலாம் கலையரங்கில் நடைபெற உள்ளது. இதில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, உரையாற்றுகிறார். தொடர்ந்து ஜிப்மர் ஆசிரியர், ஊழியர், மாணவர்களுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

இந்த நிகழ்வின் போது, உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, பிரதமர் மோடியால் தொடங்கப்பட்ட, 'தாயாரின் பெயரில் ஒரு மரக்கன்று' என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் தனது தாயார் கேசரி தேவியின் பெயரில் மரக்கன்று ஒன்றை நட உள்ளார். இந்நிகழ்வுக்குப் பிறகு, துணை ஜனாதிபதி விருந்தினர் மாளிகை திரும்புகிறார்.

நாளை (செவ்வாய்க்கிழமை) காலை புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் மாணவர்கள், பேராசிரியர்களுடன் கலந்துரையாடுகிறார். பின்னர் புதுச்சேரி விமான நிலையம் வந்து ஹெலிகாப்டரில் சென்னை சென்று அங்கிருந்து டெல்லி செல்கிறார். துணை ஜனாதிபதி வருகையால் புதுச்சேரி நகரம் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# குன்னூர் நகராட்சி கடைகளை இடிக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும்
### எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை, ஜூன் 16-**



குன்னூரில் நகராட்சிக் கடைகளை இடிக்கும் முடிவை கைவிட வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க. பொதுசெயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கை, தற்போது குன்னூர் நகராட்சியில் உள்ள சுமார் 800 கடைகளையும் இடிக்கப்போகிறோம், எனவே உடனடியாக கடைகளை காலி செய்ய வேண்டும் என்று தி.மு.க. அரசுவியாபாரிகளுக்கு நோட்டீஸ் அளித்துள்ளது. நோட்டீஸ் வழங்கிய கையோடு நகராட்சி, அதிகாரிகள் கடைகளை காலி செய்ய வியாபாரிகளை வற்புறுத்துகின்றனர்.

குன்னூர்நகராட்சி வழங்கிய மாற்று இடம் ஒரு கிலோ மீட்டர் தொலைவில், மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நடமாட்டம் இல்லாத இடத்தில். எந்தவொரு அடிப்படை வசதிகளும் செய்துதரப்படாத நிலையில், சிறிய அளவுள்ள கடைகளாக உள்ளன. வியாபாரிகள் தற்போது வணிகம் செய்து வரும் கடைகளை உடனடியாக காலி செய்துவிட்டு அங்கே செல்ல வற்புறுத்தப்பட்டு வருகின்றனர்.

பொதுவாக நீலகிரி மாவட்டம் முழுவதும், குறிப்பாக குன்னூரில் உள்ள வியாபாரிகள் கோடை சீசன் மாதங்களான ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மற்றும் ஆப் சீசன் எனப்படும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய சீசன் மாதங்களில் மட்டுமே சுற்றுலாப் பயணிகளை நம்பி வியாபாரம் செய்து வருகின்றனர். ஏற்கெனவே அரசு, போக்குவரத்து நெரிசல் அதிகமாகிறது என்று தனியார் போக்குவரத்து வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதித்த நிலையில், இந்த ஆண்டு சுற்றுலாப்பயணிகள் குறைந்த அளவே நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர். இதனால், வியாபாரம் பெருமளவு பாதித்த நிலையில், தற்பொழுது வியாபாரம் செய்து வரும் கடைகளும் இடிக்கப்பட உள்ளதாகவும், போதுமான கால அவகாசம் தராமல் உடனடியாகமாற்று இடங்களுக்குச் செல்ல அதிகாரிகள் வலியுறுத்துவதால், வியாபாரிகள் தங்களுடைய வாழ்வாதாரம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டு விடும் என்று அஞ்சுகின்றனர்.

இதனால் 800 வியாபாரிகளின் குடும்பங்களும், அக்கடைகளில் பணிபுரியும் சுமார் 2000-க்கும் மேற்பட்ட பணியாட்களின் குடும்பங்களும் நேரடியாக பாதிக்கப்படுவதுடன், மறைமுகமாக இவர்களை நம்பி வாழ்க்கை நடத்தும் நூற்றுக்கணக்கான கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, வியாபாரிகள் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். எனவே, குன்னூர் நகராட்சிக் கடைகளை இடிக்கும் முடிவை உடனடியாக கைவிட்டு, தொடர்ந்து வியாபாரிகளை பழைய இடங்களிலேயே வியாபாரம் செய்ய அனுமதிக்குமாறு தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு:
# கமல்ஹாசனுக்கு நடிகர் சங்கத்தினர் வாழ்த்து

**சென்னை, ஜூன் 16-**



சமீபத்தில் மாநிலங்களவை உறுப்பினராக கமல்ஹாசன் தேர்வு செய்யப்பட்ட நிலையில் அவருக்கு நடிகர் சங்கத்தினர் வாழ்த்து தெரிவித்தனர்.

சினிமாத் துறையில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக பயணித்து வருபவர், கமல்ஹாசன். இவர் மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை தொடங்கி அரசியல் பணியும் செய்து வருகிறார். கடந்த தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து களம் கண்டார். இதற்கிடையில், அவர் சமீபத்தில் மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு அரசியல் சார்ந்தும், சினிமா சார்ந்தும் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில், அதன் தலைவர் நாசர், பொருளாளர் கார்த்தி, துணைத் தலைவர் பூச்சி முருகன், நடிகர் சங்க மேலாளர் தாமராஜ் உள்ளிட்ட பலர் கமல்ஹாசனை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

### சுயேச்சை வேட்பாளராக போட்டி:
# ஓ.பன்னீர்செல்வத்தை தகுதிநீக்கம் செய்யக்கோரி சபாநாயகரிடம் மனு



**சென்னை, ஜூன் 16-**

பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளரை எதிர்த்து சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டதால் ஓ.பன்னீர்செல்வத்தை தகுதி நீக்கம் செய்யக்கோரி சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்ட நிலையில், மனு தொடர்பாக சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதிநீக்கம் செய்ய வலியுறுத்தி தேனி மாவட்டத்தை சேர்ந்த மிலானி என்பவர் சபாநாயகர் அப்பாவுவிட புகார் மனு அளித்துள்ளார். போடிநாயக்கனூர் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்வான ஓ.பன்னீர்செல்வம், 2024-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளரை எதி ர்த்து சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டதால், அவ ரை தகுதிநீக்கம் செய்ய வே ண்டும் என அந்த மனுவில் மிலான குறிப்பிட்டுள்ளார்.

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போதே, அ.தி.மு.க. வேட்பாளரை எதிர்த்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டதால் அரசியலமைப்பு சட்டத்தின் 10-வது அட்டவணை பிரிவு 2/1-ன் அடிப்படையில் ஓ.பன்னீர் செல்வத்தை தகுதிநீக்கம் செய்ய வேண்டும் என போடிநாயக்கனூர் தொகுதியைச் சேர்ந்த வாக்காளரான மிலானி கோரிக்கை விடுத்துள்ளார்.

மிலானியின் மனு தொடர்பாக சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து சபாநாயகர் அப்பாவு உரிய நடவடிக்கை எடுப்பார் என சட்டப் பேரவை செயலகம் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, இந்த மனு தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### 4-ம் கட்ட கல்வி விருது வழங்கும் விழா:
# பழங்குடியின மாணவிக்கு ரூ. 2 லட்சம் ஊக்கத்தொகையை வழங்கினார் விஜய்



**சென்னை, ஜூன் 16-**

த.வெ.க. சார்பில் நேற்று நடைபெற்ற 4-ம் மற்றும் இறுதி கட்ட கல்வி விருது வழங்கும் விழாவில் பழங்குடியின மாணவிக்கு ரூ.2 லட்சம் ஊக்கத்தொகையை தலைவர் விஜய் வழங்கி கவுரவித்தார்.

தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் 10, 12-ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கி கவுரவித்து வருகிறார். 2025-ம் ஆண்டுக்கான கல்வி விருது வழங்கும் விழா ஏற்கனவே 3 கட்டங்களாக மாமல்லபுரத்தில் நடந்தது.

கடந்த மாதம் 30-ம் தேதி நடந்த முதற்கட்ட பரிசளிப்பு விழாவில் 88 தொகுதி மாணவ, மாணவிகளுக்கும், கடந்த 4-ந்தேதி 2-ம் கட்டமாக 84 தொகுதிகளை சேர்ந்தவர்களுக்கும், நேற்று 32 சட்டசபை தொகுதிகள், புதுச்சேரியில் உள்ள 19 சட்டசபை தொகுதிகளை கொண்ட மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கவுரவித்தார்.

இந்த நிலையில், தமிழக வெற்றிக்கழகம் சார்பில் மாமல்லபுரம் தனியார் ஓட்டலில் நேற்று மாணவர்களுக்கான 4-ம் கட்ட மற்றும் இறுதிக்கட்ட கல்வி விருது வழங்கும் விழா நடைபெற்றது. 39 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு விருது, சான்றிதழை த.வெ.க. தலைவர் விஜய் வழங்கி வருகிறார்.

இதில் ஜே.இ.இ. அட்வான்ஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற பழங்குடியின மாணவி ராஜேஸ்வரிக்கு ரூ.2 லட்சம் ஊக்கத்தொகை, பேனா பரிசு வழங்கி விஜய் கவுரவித்தார். முன்னதாக மாணவி ராஜேஸ்வரி பற்றிய குறும்படம் திரையிடப்பட்டது. விழாவில் விஜய் பேசுகையில், "மாணவி ராஜேஸ்வரிக்கு வாழ்த்துகள். வீட்டில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் படிச்சு சாதித்திருக்கிறார். அவருக்கு விஞ்ஞானி ஆகனும்னு ஆசை இருக்கிறது. கண்டிப்பா ஒரு நாள் விஞ்ஞானியாக மாறுவார்" என்று கூறினார்.

இதையடுத்து பேசிய மாணவி ராஜேஸ்வரி, நான் மிகவும் கஷ்டப்பட்டு படித்ததை அனைவரும் பார்த்தீர்கள், நான் இந்த மேடைக்கு வருவேன் என எதிர்பார்க்கவே இல்லை. நீங்களும் என்னை போல் ஆக வேண்டுமென்றால் உங்களுக்கு உள்ள ஒரே வழி கல்வி மட்டும்தான், அதை எப்போதும் விட்டு விடாதீர்கள். விஜய் அண்ணாவை பார்க்க வேண்டும் என்பது சின்ன வயதில் இருந்து பெரிய கனவு. என்று தெரிவித்தார்.

**Format C-1**
( for candidate to publish in Newspapers, TV )
Declaration about criminal cases
( As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr. )

**Name and address of candidate** : **M.DHANAPAL,**
S/o. M. Madurai,
1/1, Vasuvasamuthram Road,
Prabilimedu, Pudupattinam, Kalpakkam,
Chengalpattu District – 603 102.

**Name of Political Party** : **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM**

**Name of Election** : **BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025***

**Name of Constituency** : **BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025**

I, M. DHANAPAL, a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A)** Pending criminal cases

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| I | Not Applicable | i) Cr.No. 685/2024 Maduranthakam, PS | Under investigation | I U/s. 189(2), 126(2), 292 of BNS Act. Demonstration without getting permission from the police and disturbing the traffic. |
| | | ii) Cr. No. 77/2025 Thirukazhukundram, PS | Under investigation | ii) U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. |

**(B)** Details about cases of conviction for criminal offences

| Sl. No. | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | **Maximum Punishment Imposed** |
|---|---|---|---|
| 1. | Not Applicable | Not Applicable | Not applicable |

* In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

**M. DHANAPAL**
AIADMK Candidate
Biennial Elections to Council of States, 2025



வளசரவாக்கம் மண்டலம் 148-வது வார்டு மேட்டுக்குப்பம் சென்னை தொடக்க பள்ளியில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகளை மாமன்ற உறுப்பினர் வி.வி.கிரிதரன் குத்துவிளக்கு ஏற்றி பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, 154,155, வார்டு ராமாபுரம், அரசு மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை வழங்கல் முகாமை காரம்பாக்கம்.க.கணபதி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் இராமாபுரம் வ.செல்வகுமார், கே.ராஜூ, வட்ட செயலாளர் ஆ.செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் ஜி.ராமகிருஷ்ணன், எம்.எல்.நாதன்,ஏ.டி. எத்திராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

## ராயபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மவுன அஞ்சலி



**சென்னை, ஜூன்- 16**

அகமதாபாத் விமானவிபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ராயபுரத்தில் உள்ள அண்ணா பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ராயபுரம் ரவுண்டப் மக்கள் இயக்கத்தின் சிறப்பு கூட்டம் சென்னை ராயபுரம் அறிஞர் அண்ணா பூங்காவில் நேற்று நடை பெற்றது. இக்கூட்டத்திற்கு ராயபுரம் ரவுண்டப் மக்கள் இயக்கத்தின் தலைவர் வழக்கறிஞர் முருக வேலு தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் துணைத்தலைவர் முன்னாள் கவுன்சிலர் மு.சம்பத், நிர்வாகிகள் ரமேஷ், தையல் கலைஞர் கே.ஏ. ராமலிங்கம்,,குணசேகரன், எஸ்.எஸ்.ஜெயமோகன், முனைவர் சுந்தர், மோதிலால் பாபு நடிகர் ஏசிஎஸ் சினிவாசன், அன்பு நித்யா,,சமூக ஆர்வலர் பூபாலன், தங்கராஜ் , ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் எழுத்தாளர் கடலார் வேலாயுதம் கலந்து கொண்டு, கடல்வளங்கள் குறித்தும் அதனை பாதுகாப்பு பராமரிப்பதன் அவசியம் குறித்தும் விரிவாக விளக்கினார். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் தான் எழுதிய பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் மரபும் புதுக்கவிதையும் கலந்த புத்தகத்தை புலவர் தண்டபாணி வழங்கினார்முடிவில் வின்னிங் ஸ்டார் ராஜகாந்தி நன்றி தெரிவித்தார். முன்னதாக அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த பயணிகளுக்கும் மாணவர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.. நாட்டுப்புற பாடகியும் நடிகையுமான கொல்லங்குடி கருப்பாயிக்கும் இரங்கல் தெரிவித்து மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சென்னை ராயபுரம் அறிஞர் அண்ணா பூங்காவில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் ராயபுரம் ரவுண்டப் மக்கள் இயக்கத்தின் சார்பில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது,

## தமிழில் சிறந்த ஆவணப்பட தயாரிப்புக்கு ரூ.1 லட்சம் பரிசு

**சென்னை, ஜூன் -16**

சமூக மாற்றத்தை ஏற்படுத்த விரும்புபவர்களுக்கான ஆவணப்பட போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூ 1 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது,


சென்னையில் உள்ள கிரேஸ் பவுண்டேஷன் உடோபியா தெரபி ஆகியவை இணைந்து ஆர்வமுள்ள குறும்பட படைப்பாளிகளை வேண்டாம் மது என்று சொல்லுங்கள் என்ற விழிப்புணர்வு ஆவணப்பட போட்டியில் பங்கேற்கவும் நேர்மறை மாற்றத்திற்கான மாற அழைப்பு விடுத்துள்ளனர். இந்த 15 நிமிட ஆவணப்படம் போதைப்பொருள பயன்பாட்டுக்கு எதிராக போராடுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் படைப்பாற்றலை ஒருங்கிணைக்கும் ஒரு தமிழ்குறும்படமாகவோ மௌனப்படமாகவோ இருக்கலாம் என்றும் இதை கூகுள் டிரைவ் மற்றும் யூடியூப் இணைப்பில் பதிவேற்றி info @gracefoundation.co என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் என்றும் இதற்கான கடைசி தேதி ஜூலை 15 ஆகும்,

தேர்ச்சி பெற்றவர்கள் வரும் ஆகஸ்ட் 3 ம்தேதி அறிவிக்கப்படுவார்கள் இந்த அறிவிப்பை வெளியிட்ட கிரேஸ் அறக்கட்டளை உடோபியா தெரபியின் நிறுவனர் டாக்டர் ஆதிரா நேவிஸ் பிரபாகர் இளைஞர்களிடையே அதிகரித்து வரும் போதை பழக்கத்தை ஒழிப்பது குறித்த விழிப்புணர்வை மையமாக கொண்டு தமது அறக்கட்டளை நோக்கமாக கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்,

இந்த ஆவணப்பட போட்டி தமிழிலோ அல்லது மௌன மொழியாகவோ இருக்கலாம் என்று தெரிவித்த ஆதிரா நேவீஸ் சிறந்த படத்திற்கு ரூ 1 லட்சம் முதல் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்தார், இரண்டாவது பரிசாக ரூ 75 ஆயிரமும் மூன்றாவது பரிசாக ரூ 50 ஆயிரமும் வழங்கப்படும் நான்காவது பரிசாக ரூ 25 ஆயிரமும் நான்கு பேருக்கு

வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்

## ராயபுரத்தில் 100 மாணவர்களுக்கு தலா ரூ.1000 கல்வி உதவித்தொகை



**சென்னை, ஜூன்- 16**

சென்னை ராயபுரம் தேவாலயத்தில் 100 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

சென்னை ராயபுரம் ஆரோக்கிய நாதர் தேவாலயம் புனித வின்சன்ட் தே பவுல் சபை ஆகியவற்றின் 91 ஆம் ஆண்டு விழா நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த விழாக்களை யொட்டி அருள் தந்தை ஞான பிரகாசர் பெயரில் 100 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது. இந்த கல்வி உதவித்தொகை பங்கு தந்தை அருள்ஜேசுதாஸ் வழங்கினார், ஒவ்வொரு மாணவருக்கும் தலா ஆயிரம் ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

விழாவில் பன்னீர்செல்வம் நினைவு அறக்கட்டளை இயக்குனர் அந்தோணி நெப்போலியன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் புனித வின்சன்ட் தே பவுல் சபை தலைவர் எட்வர்ட் ராஜா, மூத்த துணைத்தலைவர் மார்ட்டின் கென்னடி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ஆடி மாதத்தில்

## அம்மன் கோவில் ஆன்மீக பயணம் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம்: அமைச்சர் சேகர்பாபு தகவல்

**சென்னை ஜூன் 16-**

சென்னை: தமிழ்நாட்டிலுள்ள புகழ்பெற்ற அம்மன் கோயில்களுக்கு ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் தகுதியுடைய பக்தர்கள் விண்ணப்பிக்கலாம் என அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: 2025-26ம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கையில் 'ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் கோயில்களுக்கு இவ்வாண்டு 2,000 பக்தர்கள் ஆன்மிக பயணம் அழைத்து செல்லப்படுவர்' என அறிவிக்கப்பட்டது.இதை செயல்படுத்திடும் வகையில் இந்தாண்டு சென்னை, தஞ்சாவூர், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களை தலைமையிடமாக கொண்டு ஆடி மாத ஆன்மிக பயணம் 5 பயண திட்டங்களாக வரும் ஜூலை 18, 25, ஆகஸ்ட் 1, 8 மற்றும் 15 ஆகிய தேதிகளில் தொடங்கப்பட உள்ளது. ஆன்மிக பயணம் செல்ல விரும்பும் பக்தர்கள் இந்து மதத்தை சார்ந்தவராகவும், 60 வயதிற்கு மேல் 70 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.2,00,000க்கு மிகாமல் இருப்பதோடு, அதற்கான வருமான சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். போதிய உடல் தகுதி உள்ளதற்கான மருத்துவ சான்றுடன், ஆதார் கார்டு அல்லது நிரந்தர கணக்கு எண் (பான்) நகல் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in ஈ http://www.hrce.tn.gov.in > என்ற இந்து சமய அறநிலையத் துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் அடுத்த மாதம் 11ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆடி மாத ஆன்மிக பயணம் தொடர்பான விவரங்களுக்கு துறையின் இணையதளத்திலோ அல்லது 1800 425 1757 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### புளியந்தோப்பு பகுதியில்

## சமூக வலைதளத்தில் கத்தியுடன் ரீல்ஸ் வீடியோ பதிவிட்ட 2 பேர் கைது

**சென்னை ஜூன் 16-**

இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் ஒரு குறிப்பிட்ட நபரின் பக்கத்தில் 2 வாலிபர்கள் பட்டாகத்தியுடன் அச்சுறுத்தும் வகையில் ரீல்ஸ் வீடியோ பதிவிட்டது தொடர்பாக புளியந்தோப்பு காவல் நிலையத்தில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் ஆயுதசட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

புளியந்தோப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில் புளியந்தோப்பு, வெங்கடேசபுரம், 4வது தெருவில் 2 நபர்கள் பட்டாகத்தியை வைத்து வீடியோ எடுத்து இன்ஸ்டாகிராம் சமூக வலை தளத்தில் ரீல்ஸ் வீடியோ பதிவிட்டது தெரியவந்தது. அதன் பேரில் போலீசார் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.ரிஸ்வான், 2.முகமது பசல், ஆகிய இருவரை கைது செய்தனர். மேலும் விசாரணையில் எதிரி ரிஸ்வான் மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

## வண்ணாரப்பேட்டை பகுதியில் வீட்டில் மின்சார ஒயர்கள் திருடிய 2 பேர் கைது

**சென்னை ஜூன் 16-**

சென்னை, புதுவண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த வசந்த், என்பவர் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறார். இவர் புதுவண்ணாரப்பேட்டை, டி.எச்.ரோடு, ஜோதிமாளிகை அருகே புதிய வீடு கட்டி வருகிறார். வசந்த் கடந்த 4.ந் தேதி அன்று இரவு மேற்படி கட்டுமானம் நடைபெற்று வரும் வீட்டில் உள்ள ஒரு அறையில் லிப்ட அமைப்பதற்கு தேவையான மின்சார ஒயர்களை வைத்துவிட்டு மறுநாள் காலை வந்து பார்த்த போது மின்சார ஒயர்கள் திருடு போனது தெரியவந்தது. இது குறித்து வசந்த், புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு வழக்கில் தொடர்புடைய எதிரிகள் 1.சலீம் முகமது,2.வினோத்குமார், ஆகிய இரண்டு பேரை கைது செய்தனர். இவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் மேற்படி இருவரும் ஆட்டோவில் சென்று நோட்டமிட்டு மேற்படி வீட்டில் வைத்திருந்த மின்சார ஒயர்களை திருடி கடையில் விற்று கிடைத்த பணத்தை செலவு செய்தது தெரியவந்தது. மேலும் எதிரி சலீம் முகமது மீது 4 வழக்குகள் உள்ளதும், எதிரி வினோத் குமார் மீது 4 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

### அண்ணாநகர் பகுதிகளில்

## இருசக்கர வாகனங்களை திருடிய வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை ஜூன் 16-**

அரசு தேர்வுக்காக அண்ணா நகர் பகுதியிலுள்ள ஒரு பயிற்சி மையத்தில் படித்துக் கொண்டு, அண்ணா நகர் கிழக்கு, 22வது குறுக்கு தெருவிலுள்ள ஒரு விடுதியில் தங்கி படித்து வருபவர்

கௌதம். இவர் கடந்த ஏப்ரல் மாதம் 7.ந் தேதி அன்று இரவு, அவர் தங்கியிருக்கும் விடுதியின் வாசலில் அவரது இருசக்கர வாகனத்தை வழக்கம் போல நிறுத்திட்டு, மறுநாள் காலை பார்த்தபோது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து கௌதம், அண்ணாநகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அண்ணாநகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தாலுக்காவைச் சேர்ந்த கபிலன், என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். அவரிடமிருந்து 2 பல்சர் இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி அளித்த தகவலின் பேரில் மேற்படி இருசக்கர வாகன திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவு குற்றவாளி அர்ஜுன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 4 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி அர்ஜுன், அவரது ஊரைச் சேர்ந்த உறவினர் கபிலன், என்பவருடன் சேர்ந்து சென்னையில் புகார்தாரரின் இருசக்கர வாகனம் உட்பட கோயம்பேடு, திருவான்மியூர் ஆகிய பகுதிகளில் நிறுத்தி வைத்திருந்த இருசக்கர வாகனங்களை திருடிச் சென்று, நம்பர் பிளேட்டை மாற்றி பயன்படுத்தியும், சொந்த ஊருக்கு எடுத்துச் சென்று விற்றுள்ளதும், இவர் மீது ஏற்கனவே 8 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி அர்ஜுன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

## திருமங்கலம் பகுதியில் திருட்டு வழக்கில் தலைமறைவான குற்றவாளி கைது

**சென்னை ஜூன் 16-**

சென்னை பெருநகர காவல், திருமங்கலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2016ம் ஆண்டு அண்ணாநகர், தங்கம் காலனி அருகே மோட்டர் சைக்கிள் பழுது பார்க்கும் கடையில் பணம் திருடிய குற்றத்திற்காக எதிரி திலீபன், வியாசர்பாடி, சென்னை என்பவரை கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவ்வழக்கு தொடர்பாக, சென்னை, எழும்பூர், 13 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற பிணையில் சிறையிலிருந்து வெளியே வந்த எதிரி திலீபன் என்பவர் கடந்த 30.10.2024 முதல் வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்த காரணத்தினால், கனம் நீதிமன்றம் எதிரி திலீபன் என்பவரை கைது செய்து,

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிமன்ற பிடியாணை பிறப்பித்தது.

திருமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார், தீவிர தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு எதிரி திலீபன், என்பவரை கைது செய்து நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

விசாரணைக்குப் பின்னர் எதிரி திலீபன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

### செப்டம்பர் மாதம் முதல்

## சென்னை அண்ணா நகரில் 'ஸ்மார்ட் பார்க்கிங்' திட்டம் அமலுக்கு வருகிறது

**சென்னை ஜூன் 16-**

செப்டம்பர் மாதம் முதல் சென்னை அண்ணா நகரில் 'ஸ்மார்ட் பார்க்கிங்' திட்டம் அமலுக்கு வருகிறது. ஒரு மணி நேரத்திற்கு சரக்கு வாகனத்திற்கு ரூ.60, கார்களுக்கு ரூ. 40 இரு சக்கர வாகனங்களுக்கு ரூ. 20 பார்க்கிங் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. செல்போன் செயலி மூலம் முன் கூட்டியே பார்க்கிங் இடங்களை முன்பதிவு செய்யலாம். யுபிஐ, ரொக்கப் பரிவர்த்தனை முறைகளில் கட்டணம் செலுத்தலாம்.

### கே.கே.நகர் பகுதியில்

## வாலிபரிடம் செல்போன் மற்றும் பணத்தை திருடியவர் கைது

**சென்னை ஜூன் 16-**

திருவாரூர் மாவட்டத்தைச்சேர்ந்த நூரில் அமீன், என்பவர் வெளிநாட்டு விசாவை புதுப்பிப்பதற்காக கடந்த 3.04.2025 ந் தேதி அன்று சென்னை வந்து, கே.கே.நகர் பகுதியில் உள்ள தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கியுள்ளார். நூரில் அமீன் இரவு உணவு சாப்பிட்டு விட்டு, தங்கும் விடுதிக்கு நடந்து சென்ற போது, வழியில் அடையாளம் தெரியாத நபர் மேற்படி நூரில் அமீனிடம் தன் பெயர் நஞ்சுண்ட கவுடா என்று கூறி அறிமுகமாகி உடைமைகள் அனைத்தும் தொலைந்து விட்டதாகவும், தங்குவதற்கு இடம் வேண்டும் என உதவி கேட்டுள்ளார். உடனே நூரில் அமீன், நஞ்சுண்ட கவுடாவை அவரது அறையில் தங்குவதற்கு அனுமதித்துள்ளார். இந்நிலையில் நூரில் அமீன் இரவு 11.00 மணியளவில் தூங்கி எழுந்து பார்த்த போது, அவரது 2 செல்போன்கள், ரொக்கம் ரூ.500 மற்றும் சவுதி பணம் ரியால் இந்திய மதிப்பில் ரூ.5000/- ஆகியவற்றை நஞ்சுண்ட கவுடாவை திருடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து நூரில் அமீன் கே.கே.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். கே.கே.நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து நஞ்சுண்ட கவுடா, வ/25, தும்கர் மாவட்டம், கர்நாடகா மாநிலம் என்பவரை கைது செய்தனர். விசாரணைக்குப்பின்னர் எதிரி நஞ்சுண்ட கவுடா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

### கொளத்தூர் பகுதியில்

## ஆட்டோவில் லிப்ட் கேட்டு பயணித்து 3 பேரிடம் வழிப்பறி: 4 பேர் கைது

**சென்னை ஜூன் 16-**

சென்னை, அமைந்தகரை, சாய் தெருவில் ஆட்டோ ஓட்டுநர் காட்வின், என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 12.ந் தேதி அன்று மாலை அவரது உறவினர் ஹரிஷ் மற்றும் நண்பர் விக்னேஷ் ஆகியோருடன் சேர்ந்து கொளத்தூர் பகுதியில் லவ் போர்ட்ஸ் வாங்குவதற்கு ஆட்டோவில் சென்ற போது, வழியில் பூம்புகார் நகர் 1வது தெருவில், லிப்ட் கேட்டு ஏறிய 2 பேர் , வரலட்சுமி நகர் ரேஷன் கடை அருகில் ஆட்டோ நின்ற போது, அவ்விடத்தில் இருந்த 2 நபர்களுடன் சேர்ந்து மேற்படி காட்வின் மற்றும் அவரது நண்பர்களிடம் இருந்த பணம் ரூ.3,350/- பறித்துக்கொண்டு, செல்போனில் வீடியோ பதிவு செய்து மிரட்டிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து காட்வின் கொளத்தூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கொளத்தூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழிப்பறி செய்த 1.கார்த்திக், சென்னை 2.கிஷோர், 3.விஷால்ராம், 4.இளங்கோவன், ஆகிய நான்கு பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து ரொக்கம் ரூ.3,350/- பறிமுதல் செய்யப்பபட்டது.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் கார்த்திக் மீது 16 வழக்குகளும், கிஷோர் மீது 2 வழக்குகளும், விஷால் ராம் மீது 1 வழக்கு உள்ளதும், இளங்கோவன் மீது 2 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட எதிரிகள் நான்கு நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

## மாதவரம் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 7 பேர் கைது

**சென்னை ஜூன் 16-**

மாதவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படை போலீசார் மாதவரம், அருகே கண்காணித்தபோது, அங்கு சிலர் பணம் வைத்து சீட்டுக்கட்டுகளுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில் மேற்படி இடத்தில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட 1.ஜெகன், 2.செந்தில்குமார், , 3.பாரூக் பாஷா, 4.ராதாகிருஷ்ணன், 5.சலீம் ராஜா, 6.பக்ருதீன் ஷெரிப். 7.பாஸ்கர், ஆகிய 7 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து சூதாட்டத்திற்கு பயன்படுத்திய பணம் ரூ.250/-, நோட்டு புத்தகம் மற்றும் 2 சீட்டுக்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக, மாதவரம் காவல் நிலையத்தில் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, கைது செய்யப்பட்ட 7 பேர் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பாண்டிபஜார் பகுதியில் தனியார் தங்கும் விடுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 9 பேர் கைது

**சென்னை ஜூன் 16-**

சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படை போலீசார் தி.நகர், வடக்கு உஸ்மான் ரோட்டிலுள்ள தனியார் தங்கும் விடுதியை கண்காணித்தபோது, அங்கு சிலர் பணம் வைத்து சீட்டுக்கட்டுகளுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில் மேற்படி இடத்தில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட தனியார் விடுதி மேலாளர் 1.தமிழ்அரசன், மாவட்டம் உட்பட 2.ராஜா, வ/53, தாம்பரம், சென்னை, 3.கீர்த்திராஜ், 4.அஜய்காந்த், வ/31, பெங்களூரு, கர்நாடகா மாநிலம், 5.சேகர், 6.ராஜன், 7.ரமேஷ், 8. சண்முகம், , 9.கோகுல், ஆகிய 9 நபரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து சூதாட்டத்திற்கு பயன்படுத்திய பணம் ரூ.56,400/-, மற்றும் 8 சீட்டுக்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.இது தொடர்பாக, சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, கைது செய்யப்பட்ட 9 பேர் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# புதுச்சேரிக்கு அரசு முறை பயணமாக குடியரசு துணைத் தலைவர் வருகை

## துணைநிலை ஆளுநர், முதல்வர், அமைச்சர்கள், அதிகாரிகள் வரவேற்பு



**புதுச்சேரி ஜூன்16,**

புதுச்சேரிக்கு அரசு முறை பயணமாக குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது அதன் விபரம் ஆவது புதுச்சேரி விமான நிலையத்தில் வந்து இறங்கிய அவரை துணைநிலை ஆளுநர் குகை லாஷ்நாதன், முதலமைச்சர் ந.ரங்கசாமி ஆகியோர் பொன்னாடை போர்த்தி பூங்கொத்து கொடுத்து நினைவுப் பரிசு வழங்கி வரவேற்றனர். சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், உள்துறை அமைச்சர் ஆ.நமச்சிவாயம், வேளாண் அமைச்சர் க.ஜெயக்குமார், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பொ.ராஜவேலு, பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் செல்வகணபதி, பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் வெ.வைத்திலிங்கம், அரசு கொறடா, ஆறுமுகம் (எ) ஏ கே டி , சட்டமன்ற உறுப்பினர்கள் பி எம் எல் .கல்யாணசுந்தரம், பாஸ்கர் (எ) தட்சணாமூர்த்தி, . பிரகாஷ்குமார், சிவசங்கரன், வைத்தியநாதன், . வெங்கடேசன், வி.பி. ராமலிங்கம், அசோக்பாபு, தலைமைச் செயலர் சரத் சவுகான், காவல்துறை தலைமை இயக்குநர் ஷாலினி சிங்,அரசுச் செயலர் (செய்தி மற்றும் விளம்பரம்) . கேசவன், ஆகியோரும் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அவர்களை வரவேற்றனர்.



புதுச்சேரிக்கு அரசு முறை பயணமாக வந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரை காங்கிரஸ் தலைவரும், எம் பி.யுமான வைத்திலிங்கம் , முன்னாள் முதல்வர் நாராயணசாமி, சட்டமன்ற உறுப்பினர் வைத்தியநாதன் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.



விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சரவணன் உத்தரவின்பேரில் விழுப்புரம் மாவட்ட சைபர் கிரைம் காவல்துறை சார்பில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு காவல்துறை மற்றும் சிறுவர் சிறுமியர் மன்றம் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சி தனியார் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கல்லூரி துணை முதல்வர்கார்த்திக்வரவேற்றார். கூடுதல்காவல்கண்காணிப்பாளர்தினகரன், இளமுருகன் சிறப்புரையாற்றினர்.

## தி.மலை செங்கம் சாலை கிரிவலப்பாதை சந்திப்பில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் ரவுண்டானா அமைக்க வழிகாட்டி பலகைகள் அகற்றம்

**திருவண்ணாமலை ஜூன்.16-**

தி.மலை செங்கம் சாலை கிரிவல பாதை சந்திப்பில் ரூ.1கோடி மதிப்பீட்டில் ரவுண்டானா அமைக்க அந்த பகுதியில் வைக்கப்பட்டுள்ள வழிகாட்டி பலகைகள் அகற்றும் பணி நடைபெற்றுவருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு பரிந்துரையின்பேரில் திருவண்ணாமலை செங்கம் சாலை கிரிவல பாதை சந்திப்பில் (மேற்கு காவல் நிலையம் எதிரில்) ரவுண்டானா அமைக்கப்படவுள்ளது. இதற்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.1கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது செங்கம் சாலை கிரிவல பாதை சந்திப்பில் ரூ.1கோடி மதிப்பீட்டில் புதிதாக ரவுண்டானா அமையவுள்ளது.

இதையொட்டி அந்த பகுதியில் ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள வழிகாட்டி பலகைகள் அகற்றும் பணி மற்றும் சாலைகள் அகலப்படுத்தும் பணி நெடுஞ்சாலைத்துறை வட்ட கண்காணிப்பு பொறியாளர் ஆர்.கிருஷ்ணசாமி கோட்ட பொறியாளர் ப.ஞானவேல் ஆகியோரது வழிகாட்டுதலின்பேரில் உதவி கோட்ட பொறியாளர் கே.அன்பரசு தலைமையில் நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர்கள் சாலை ஆய்வாளர்கள் பணியாளர்கள் ஜெசிபி இயந்திரம் மூலம் வழிகாட்டி பலகைகளை மாற்று இடத்தில் வைக்க அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்து வசதிக்காகவும் கிரிவல பக்தர்களின் நெரிசலை தவிர்க்கவும் விரைவில் ரவுண்டானா அமைக்கும் பணி தொடங்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெயங்கொண்டான் ஊராட்சியில் 100 நாள் வேலை பணிகள்: மஸ்தான் எம்.எல்.ஏ.ஆய்வு



**செஞ்சி ஜூன் -16.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஜெயங்கொண்டான் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திருவினாயகபுரத்திலிருந்து ஜெயங்கொண்டான் செல்லும் சாலையில் இருபுறமும் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால்துார்வாரும்பணிநடைபெற்றுக் கொண்டிருக்கிறது.


இப்பணியில் ஜெயகொண்டன் கிராமத்தைச் சேர்ந்தநூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.இப்பணியை முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று திடீர் ஆய்வுமேற்கொண்டார்.

அப்போது 100 நாள் வேலை திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களின் வருகை பதிவேடுகளை ஆய்வு செய்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல் .ஏ பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இதில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி சுப்பிரமணியன் நிர்வாகிகள் வாசு அய்யாதுரைஇக்பால்தொண்டரணி பாஷா ஜம்போதி பழனி செந்தில்உள்ளிட்டோர்உடன் இருந்தனர்

## செஞ்சியில் நடைபெற்ற

# தேசிய மக்கள் நீதிமன்றத்தில் 325 வழக்குகளுக்கு ரூ 5.71 கோடி மதிப்பில் தீர்வு



**செஞ்சி,ஜூன்.16.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் நீதி மன்றத்தில் வாகன விபத்து உள்ளிட்ட 325 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.

சார்பு நீதி மன்ற நீதிபதி கதிரவன், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி செல்வ அரசி, குற்றவியல் நடுவர் நீதிபதி பி.வித்தியா ஆகியோர் வழக்குகளை விசாரணை செய்து நஷ்ட ஈட்டு தொகை வழங்கி சுமுக தீர்வு காணப்பட்டது.

தேசிய மக்கள் நீதிமன்றம் மூலம் செஞ்சியில் முடிவான வழக்குகள்.

மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்வு எண்ணிக்கை 92 . தொகை ரூ 5 கோடியே 17 லட்சத்து 20 ஆயிரத்து 328. உட்பட வங்கி கடன், கல்வி கடன், நிலப் பிரச்சனை உள்ளிட்ட மொத்தம் 325 வழக்குகளுக்கு ரூ 5 கோடியே 71 லட்சத்து 83 ஆயிரத்து 328 மதிப்பில் தீர்வு காணப்பட்டது .

அதிகபட்சமாக ஒரு வாகன விபத்து வழக்குக்கு ரூ 80 லட்சமும் மற்றொரு வாகன விபத்து வழக்குக்கு ரூ 62 இலட்சமும் தீர்வு காணப்பட்டது.

இதில் பார் கவுன்சில் உறுப்பினர் கதிரவன், அரசு வழக்கறிஞர்கள் சக்தி வேல், ஜி கிருஷ்ணன்,செஞ்சி அட்வகேட் அசோசியேஷன் தலைவர் கலியமூர்த்தி, ப ா ர் அசோசியேஷன்தலைவர் பிரவீன், செயலர் அசாருதீன், உள்ளிட்ட வழக்குரைஞர்கள், வழக்காடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# செஞ்சியில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற தன்னார்வலர்களுக்கு பயிற்சி சான்றிதழ்: மஸ்தான் எம். எல். ஏ .வழங்கினார்



**செஞ்சி ஜூன் -16**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில்உள்ள செக்கோவர் நிறுவனத்தின் சார்பில்உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டுஇளம் குழந்தைகள் பராமரிப்பு கல்வி மற்றும் சம உரிமை திட்டத்தின் கீழ் இரண்டு நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி செஞ்சியில் நடைபெற்றது.

செக்கோவர்நிறுவனத்தின் இயக்குனர் அம்பிகா சூசைராஜ் தலைமையில் நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சியில்சென்னை ஹோப் எவர் பவுண்டேஷன்இயக்குனர் ரோஸ்லின் கயல்விழி, ஸ்டெப்நிறுவனத்தின் செயலாளர் விஜயலட்சும உள்ளிட்டோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.பயிற்சி பெற்ற தன்னார்வலர்களுக்குதிறன் மேம்பாட்டு பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி அந்நிறுவனத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பயிற்சியில் பங்கேற்ற 30 தன்னார்வலர்களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.

இதில் செஞ்சி துணை வட்டாட்சியர் ராஜ்குமார், ஆடிட்டர் பார்த்திபன்,தொண்டரணி பாஷா, செக்கோவர் பணியாளர்கள் ஜெயசீலன், ரவீந்திரன், ராஜாராமன், பிலிப், சக்திவேல், அரசு, கோடீஸ்வரி, சங்கீதா, குலசேகர், ராஜசேகர், சிவநாதன், காமாட்சி, மேரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புன்னை, தக்கோலம் பகுதிகளில் நாளை மின்தடை

**அரக்கோணம் ஜூன் 16**

அரக்கோணம் கோட்டம் உட்பட்ட புன்னை தக்கோலம் மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் நாளை 17ஆம் தேதி நடைபெறுகிறது இதனை முன்னிட்டு இந்த இரு மின்நிலையங்களில் மின் நிறுத்தம் செய்யப்பட உள்ளது ஆக மின்தடைபடும் பகுதிகள் விவரம் வருமாறு:- நெமிலி, காட்டுப்பாக்கம், மகேந்திரவாடி, மேல்களத்தூர், எலத்தூர், கீழ்வெங்கடாபுரம், வேட்டாங்குளம், மேலேரி, சிறுணமல்லி, சம்பத்ராயன் பேட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் தக்கோலம் சிஐஎஸ்எப் அரிகிலபாடி, சேந்தமங்கலம், புதுகேசாவரம், அனந்தாபுரம், மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் அடங்கும்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# 10,12-ம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க வி.ஐ.டி.யில் கருத்தரங்கம்: வேந்தர் ஜி.விசுவநாதன் பங்கேற்பு



**வேலூர் ஜூன்.16-**

பள்ளிக்கல்வித்துறை மற்றும் வி.ஐ.டி பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து வேலூர் மாவட்ட அரசு பள்ளி மாணவர்களின் வெற்றிக்கான சவால்கள் மற்றும் வழிமுறைகள் குறித்த கருத்தரங்கை அண்ணா அரங்கத்தில் நடத்தின. வேலூர் மாவட்டத்தில் உள்ள வேலூர், காட்பாடி உள்பட 8 வட்டாரங்களை சேர்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துகளை தெரிவித்தனர்.

நிகழ்ச்சிக்கு வி.ஐ.டி வேந்தர் ஜி. விசுவநாதன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் பேசுகையில்,

நாம் கல்வியில் முன்னேறினால் தான் பொருளாதாரத்தில் முன்னேற முடியும். வசதி இல்லாதவர்கள் தான் அரசு பள்ளியில் படிக்கின்றனர். நான் நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு அரசு பள்ளியில் தான் படித்தேன். தொடக்க கல்வி, உயர்நிலைக் கல்வி ஆகியவற்றை அரசு பள்ளியில் தான் கற்றேன். எங்கள் கிராமத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தூரம் குடியாத்தத்திற்கு நடந்து சென்று படித்தேன். எங்களுக்கு கல்வி கொடுத்த ஆசிரியர்களை நான் என்றும் மறப்பதே இல்லை. ஆசிரியர் தொழில் இல்லை. இது ஒரு தொண்டு. மற்றது தொழில் ஆகும். உயிரை கொடுத்தவர்கள் பெற்றோர். உயர்வை கொடுத்தவர்கள் ஆசிரியர்கள். அப்போதெல்லாம் மூத்த ஆசிரியர்கள் என்றால் அவர்கள் கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

கல்வியில் நாம் எப்படி முன்னேற போகிறோம்? பள்ளிக்கல்வியில் முதல் இடத்தில் இருப்பது தென்கொரியா. அவர்களுக்கும் பின்லாந்து நாட்டிற்கும் தான் போட்டி. இதில் இந்தியா 101வது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் இருந்து தென்கொரியாவுக்கு ஒரு குழுவை அனுப்ப வேண்டும் என நான் கல்வி அமைச்சரிடம் கூறியுள்ளேன். அங்கு அதிக நேரம் பள்ளிகளில் கல்வியை கற்றுக் கொடுக்கிறார்கள். ஒரு மாணவர் 10 மணி நேரம் கல்வி கற்கிறார். இரவு 10 மணிக்கு மேல் பள்ளியை நடத்தக்கூடாது என அவர்கள் உத்தரவே போட்டு உள்ளனர்.

கல்விக்கு உரிய முக்கியத்துவத்தை நம் நாட்டில் கொடுப்பதில்லை.

முன்பெல்லாம் கல்வி மாநில பட்டியலில் இருக்கும். எமர்ஜென்சியின் போது பிரதமர் இந்திரா காந்தி கல்வியை மாநில பட்டியலில் இருந்து பொது பட்டியலுக்கு மாற்றி விட்டார்.

கல்விக்கு அதிகமாக செலவழிக்கும் நாடுகளின் பட்டியலில் கியூபா முதல் இடத்தில் உள்ளது. அவர்கள் 11.5 சதவீதம் கல்விக்கு செலவழிக்கின்றனர். நாம் மூன்று சதவீதத்திற்கும் குறைவாகத் தான் கல்விக்கு செலவழிக்கின்றோம். இதில் நாம் 155 வது இடத்தில் இருக்கிறோம்.

வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் 44 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்றனர். இதில் 4 ஆயிரம் மாணவர்கள் ஆராய்ச்சி படிப்பு படிக்கின்றனர். அவர்களுக்கு நாங்கள் மாதம் ரூ.35 ஆயிரம் உதவி தொகை வழங்குகிறோம். மீதியிருக்கும் 40 ஆயிரம் பேரில் 700 பேருக்கு தான் அரசின் கல்வி உதவி தொகை கிடைக்கிறது.

கல்விக்கு அதிகமாக செலவழிக்க வேண்டும். புதிய கல்விக் கொள்கையில் 28 சதவீதத்தில் இருந்து 50 சதவீதத்திற்கு உயர்த்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அது 4 ஆண்டுகளாகியும் மாறவில்லை.

வேலூர் மாவட்டத்தில் அனைவருக்கும் உயர் கல்வி திட்டத்தில் 10 ஆண்டுகளில் பத்தாயிரம் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கியுள்ளோம். இதில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் தான். இதில் பெரும்பான்மையான நிதி வி.ஐ.டி பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் என்னுடைய பிறந்தநாளில் வழங்குகின்றனர். அவர்கள் ஒருநாள் சம்பளத்தை கடந்த ஆண்டு ரூ.94 லட்சம் வழங்கினர். மேலும் மற்றவர்கள் கொடுத்த பணத்தையும் போட்டு ஒன்றரை கோடி ரூபாய் இந்த நிதிக்கு வழங்கினேன். இந்த ஆண்டு திருவண்ணாமலை மாவட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்தை பொருத்தவரை 75 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். வட ஆற்காடு மாவட்டம் இந்தியாவிலேயே ஏழைகள் இல்லாத மாவட்டமாகவும், குடிசைகள் இல்லாத மாவட்டமாகவும் மாற வேண்டும் என்பதை என்னுடைய ஆசை.

இங்கு ஸ்டார்ஸ் திட்டத்தில் படித்த மாணவர்கள் வெளிநாடு சென்று பணி செய்து அவர்கள் தந்தை பெற்ற மாத சம்பளத்தை விட 10ல் இருந்து 20 மடங்கு அதிகமாக சம்பாதிக்கின்றனர். உயர்கல்வி வீட்டையும் மாற்றும், நாட்டையும் மாற்றும்.

உயர்கல்வியில் நாம் பின் தங்கி இருக்கிறோம். ஒரு கல்வி நிறுவனம் வெற்றி பெற வேண்டும் என்றால் ஆசிரியர்கள் தான் முக்கியம். அரசு பள்ளி தலைமை ஆசிரியர்கள் அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினரை அணுகி அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பள்ளி கட்டிடத்தை கட்ட வழிவகை செய்ய வேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் கல்வியில் நாம் முன்னேற வேண்டும்.இவ்வாறு அவர் பேசி னார்.நி கழ்ச் சி யில் கலெக்டர் சுப்புலெட்சுமி பேசியதாவது;

பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் முன்னேற வேண்டும். அப்போதுதான் சமூக, பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க வேண்டும். அதற்கான உத்வேகத்தை பள்ளிக் கல்வி இயக்குனர் நமக்கு அளித்துள்ளார். நாம் வரும் கல்வி ஆண்டில் பொது தேர்வுகளில் முதல் ஐந்து இடத்தில் இருக்க வேண்டும். மேலும் பள்ளிகளுக்கு தேவையான அத்தனை ஒத்துழைப்பையும் மாவட்ட நிர்வாகம் செய்து கொடுக்கும்.

மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நன்றாக பாடம் நடத்தி, அரசு பள்ளியில் இருந்து தரமான கல்வியை மாணவர்கள் கற்றார்கள் என்ற நல்ல செய்தி கிடைக்க வேண்டும். வேலூர் மாவட்டத்தில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றவர்களாக மாணவர்கள் தேர்ச்சி பெற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் ஒரு மதிப்பெண் வினா- விடையை வேலூர் மாவட்ட கலெக்டர் சுப்புலெட்சுமி வெளியிட பள்ளிக்கல்வித்துறை இயக்குனர் கண்ணப்பன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் வி.ஐ.டி துணைத்தலைவர் சேகர் விசுவநாதன், பேராசிரியர்கள் மீனாட்சி, கோவர்தன், தலைமை ஆசிரியர்கள் சிவவடிவு, குலசேகரன் உள்பட பல்வேறு தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். முன்னதாக வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) தயாளன் வரவேற்றார். முடிவில் மாவட்ட கல்வி அலுவலர் சத்திய பிரபா நன்றி கூறினார்.

**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை**
**நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை**

IN THE COURT OF THE HON'BLE III ADDITIONAL DISTRICT MUNSIF
AT PUDUCHERRY
O.S.No. 306 OF 2025

1. Radjeswary @ Valentine Marie Delcasse
2. Jean Bosco Marie Delcasse
.......Plaintiffs
Vs
Angappan
......Defendant

PUBLIC NOTICE

Take notice that the above Plaintiffs has filed OS.No. 306 of 2025 before the above said court to declaration the Plaintiff 1 and 2 are the only legal heirs of the deceased late Doret Victorie Marie Delcasse who died on 24.10.2015 at Avvai Nagar, Lawspet and death was registered before Oulgaret Municipality. The Hon'ble Court has ordered Public Notice and posted the above petition on 04.07.2025 at 10.00 A.M before the aforesaid Court for hearing objection. Any one having objection to the same may appear before the above said Hon'ble Court on the above date and submit your objection in person or through your counsel, failing which the above petition will be decided on merits in your absence.

R.KARNAN,
Advocate,
PUDUCHERRY.

IN THE COURT OF THE HON'BLE II-ADDITIONAL DISTRICT MUNSIF
AT PUDUCHERRY
O.S.NO. 609/2025

1. NIVISRI (minor)
(The Plaintiff being minor represented by natural minor guardian her mother Selvi)
.......Plaintiff
Vs
1. JAYA PANDIYAN
2. The Registrar of Births and Deaths
Oulgaret Municipality Puducherry.
Puducherry 605 005.
........Defendants

PUBLIC NOTICE

Please take notice that the above Plaintiff has filed a suit to declare the minor Plaintiff's name as "NIVISRI", and by granting a mandatory injunction directing the 2nd Defendant to rectify the minor Plaintiff's name in the Birth certificate in column No. (1) as "NIVISRI" instead of "NIVITHA" Registration No. J/2014/12772, date 12.12.2014 and the same is posted on 22.07.2025 at 10.00 a.m before the Hon'ble II-Additional District Munsif, at Puducherry, for your appearance and objection if any or otherwise the matter will be decided on merits.

M. MAHALAKSHMI,
Advocate, PUDUCHERRY.

# பொது அறிவிப்பு

சென்னை பாலவாக்கம், கந்தசாமி நகர், மகாத்மா காந்தி, இரண்டாவது தெரு, கதவு எண்: 2/389-ல் வசித்து வரும் ஜெய்சங்கரன் அவர்களின் குமாரர் பாலமுருகன் அவர்கள் அறிவுறுத்தலின்படி புதுவை மாநிலம் தியாகராஜா வீதியில் வசிக்கும் வழக்கறிஞர் மு.மணிகண்டன் B.A,LLB,LLM அளிக்கும் பொது அறிவிப்பு.

எனது கட்சிக்காரர் பாலமுருகன் தன்னுடைய சொத்து சம்பந்தமான மூலதாரப்பத்திரம், காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு பதிவு மாவட்டம், செங்கற் பட்டு வட்டம், திருப்போரூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட பத்திரம் எண்: 3622/2005, பதிவு நாள் 17.06.2005, இக்கிரைய பத்திரம் பதியப்பட்டது, இக்கிரைய பத்திரத்தின் அசலை நான் புதுவை மாநிலம் பழைய பேருந்து நிலையம், உழவர் சந்தை அருகே என் வண்டியில் மாட்டியிருந்து பைவழியில் எங்கே தவறிவிட்டது, மேற்படி மூலதாரம் பத்திரத்தை கண்டு எடுப்பவர்கள் என் கட்சிக்காரர் பாலமுருகன் இடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்,
மு.மணிகண்டன்.

தமிழ்நாடு அரசு,
நாகர்கோவில் மாநகராட்சி
பொது நிதி - 2025-26 - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். இ3 / 5848 /2025 — ஒப்பந்தப்புள்ளி (இரு உறை முறை) — நாள்: 13.06.2025

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | இம்மாநகராட்சிக்குட்பட்ட கோணம் - அறிவு சார் மையம் அருகில் முதல்வரின் படைப்பகம் கட்டும் பணி | 310.00 | 310000 |

1.ஒப்பந்தபுள்ளி படிவம் பெறும் இணையதள முகவரி : http://tntenders.gov.in
2.முன் கலந்தாய்வு 27.06.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 11 மணிக்கு நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்
3.ஒப்பந்தபுள்ளி படிவங்கள் 16.07.2025 புதன் கிழமை மாலை 3.00 மணி வரை நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் சமர்பிக்கவும்
4. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 16.07.2025 புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் திறக்கப்படும்
5. ஒப்பந்தபுள்ளி சம்மந்தமான கூடுதல் விவரங்களை மாநகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
6.ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் எதிர்பாராத விதமாக விடுமுறை தினமாக அறிவிக்கபட்டால் அடுத்த வேலை நாளில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அதே தேதி மற்றும் நேரங்களில் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ./ 3019 / ஒப்பந்தப்புள்ளி / 2025
ஆணையாளர், நாகர்கோவில் மாநகராட்சி

## 2023-2025 டெஸ்ட் சாம்பியன்ஷிப்:
# 9 அணிகள் பெற்ற பரிசுத்தொகை விவரங்களை வெளியிட்ட ஐ.சி.சி.




**துபாய், ஜூன் 16-**
2023-2025 டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்ற 9 அணிகள் பெற்ற பரிசுத்தொகை விவரங்களை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

**2021-ம் ஆண்டில்...**
உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டி என்பது 2 ஆண்டு காலக்கட்டத்தில் நடக்கும் டெஸ்ட் போட்டிகளின் முடிவை உள்ளடக்கியதாகும். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பை 2019-ம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) அறிமுகப்படுத்தியது. முதலாவது சாம்பியன்ஷிப்பின் இறுதி ஆட்டம் 2021-ம் ஆண்டில் நடந்தது. இதில் நியூசிலாந்து அணி இந்தியாவை தோற்கடித்து கோப்பையை வென்றது. 2023-ம் ஆண்டில் நடந்த 2-வது சாம்பியன்ஷிப்பில் ஆஸ்திரேலிய அணி இந்தியாவை வீழ்த்தி கோப்பையை உச்சிமுகர்ந்தது.

இதைத் தொடர்ந்து 9 அணிகள் இடையிலான 3-வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் 2023-ம் ஆண்டில் தொடங்கியது. இதில் தொடக்கத்தில் சிறப்பாக விளையாடிய இந்தியா இறுதி சுற்றை நெருங்கி வந்தது.

**இறுதிப்போட்டி...**
ஆனால் சொந்த மண்ணில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும், ஆஸ்திரேலியாவில் நடந்த பார்டர்-கவாஸ்கர் தொடரிலும் அடைந்த மோசமான தோல்வியால் இந்திய அணி இறுதிப்போட்டி வாய்ப்பை பறிகொடுத்து 3-வது இடத்துக்கு (50 சதவீத புள்ளி) தள்ளப்பட்டது. தென் ஆப்பிரிக்கா முதலிடத்தையும்(69.44 சதவீத புள்ளி), ஆஸ்திரேலியா 2-வது இடத்தையும் (67.54 சதவீத புள்ளி) பிடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. நியூசிலாந்து 4-வது இடத்தையும், இங்கிலாந்து 5-வது இடத்தையும் பெற்றன.

**தென் ஆப்பிரிக்கா...**
இதனையடுத்து 3-வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பில் மகுடம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா- தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின. இதில் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா கோப்பையை கைப்பற்றியது.

### பரிசுத்தொகை விவரம்:

1. தென் ஆப்பிரிக்கா - 30.75 கோடி.
2. ஆஸ்திரேலியா - 18.5 கோடி.
3. இந்தியா - 12.31 கோடி.
4. நியூசிலாந்து - 10.26 கோடி.
5. இங்கிலாந்து - 8.20 கோடி.
6. இலங்கை - 7.18 கோடி.
7. வங்காளதேசம் - 6.15 கோடி.
8. வெஸ்ட் இண்டீஸ் - 5.13 கோடி.
9. பாகிஸ்தான் - 4.10 கோடி.

## துணை முதல்வர் உதயநிதி வாழ்த்து



தென்ஆப்பிரிக்கா அணி ஐசிசி நடத்தும் தொடர்களில் சாம்பியன் பட்டம் வெல்ல முடியாமல் திணறி வந்தது. இந்நிலையில் 27 வருடத்திற்குப் பிறகு ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் கோப்பையை டெம்பா பவுமா தலைமையிலான தென் ஆப்பிரிக்கா அணி வென்று அசத்தியுள்ளது. இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவை 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 27 வருடத்திற்குப் பிறகு தென் ஆப்பிரிக்கா ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன் ஆகியுள்ளது.

இந்நிலையில், தென்னாப்ரிக்க அணிக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில், மகத்தான வெற்றி பெற்ற தென்னாப்ரிக்காவுக்கு வாழ்த்துகள். அனைத்து சவால்களையும் எதிர்த்த கேப்டன் பவுமாவுக்கு சிறப்பு பாராட்டு. அற்புதமான ஆட்டத்தால், விமர்சனம் செய்த வாய்களை அடைத்துவிட்டீர்கள். எய்டன் மார்க்ரமின் பங்களிப்பை பாராட்டியே ஆகவேண்டும். லார்ட்ஸ் மைதானத்தில் நீங்கள் பெற்ற வெற்றி, சென்னை வரை எதிரொலிக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

## விசாரணை குழு அமைப்பு

நடப்பு ஐபிஎல் தொடரில் ஆர்சிபி அணி கோப்பையை கைப்பற்றியது. ஐபிஎல் வரலாற்றில் ஆர்சிபி அணி முதல் முறையாக கோப்பை வென்றது. இதனை ரசிகர்கள் மட்டுமின்றி வீரர்கள் கொண்டாடினர். ஆர்சிபி வீரர்களுக்கு பாராட்டு விழா நடத்துவதற்காக பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனை கண்டுகளிப்பதற்காக அங்கு மக்கள் ஏராளமானோர் கூடினர். இந்த கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆர்சிபி வெற்றிக் கொண்டாட்டத்தில் நடந்த நெரிசலைப் போல எதிர்காலத்தில் இதுபோன்று நடக்காமல் இருப்பதை உறுதி செய்வதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பதற்கு 3 பேர் கொண்ட குழுவை பிசிசிஐ அமைத்துள்ளது. பிசிசிஐ செயலாளர் தேவஜித் சைக்கியா தலைமையில், பொருளாளர் பிரப்தேஜ் சிங் பாட்டியா, துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா ஆகியோர் குழுவில் உள்ளனர்

## ஆஸி., அணியில் மாற்றம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் மாற்றம் செய்யபட்டுள்ளது. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி நிறைவடைந்த நிலையில், ஆஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இந்த டெஸ்ட் தொடர் வருகிற ஜூன் 25 முதல் தொடங்கவுள்ளது.

இந்த டெஸ்ட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் மாற்றம் செய்யப்பட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. காயம் காரணமாக பிரண்டன் டாக்கெட்டுக்குப் பதிலாக அணியில் சீன் அப்பாட் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியாவுக்கு எதிரான பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரிலும் பிரண்டான் டாக்கெட் அணியில் இடம்பெற்றிருந்தார். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான ரிசர்வ் வீரராக அணியில் இடம்பெற்றிருந்த அவர், காயம் காரணமாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட முடியாத சூழல் உருவாகியுள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய சீன் அப்பாட், பிரண்டான் டாக்கெட்டுக்குப் பதிலாக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## முதல் போட்டி டிராவானது

அமெரிக்காவில் நடைபெற்ற முதல் கிளப் உலகக் கோப்பை போட்டி சமனில் முடிந்தது. இன்டர் மியாமி அணியும் அல்-அஹ்லி அணியும் முதல் போட்டியில் மோதின. இந்தப் போட்டியில் இரு அணிகளுமே கோல் அடிக்காமல் போட்டியை முடித்தது. 57 சதவிகிதம் பந்தினை கட்டுப்பாட்டுக்குள் வைத்த இன்டர் மியாமி அணி 266 பாஸ்களை செய்து அசத்தியது. மெஸ்ஸி அதிகபட்சமாக கோல் அடிக்க 7 முறை முயற்சித்தார்.

அமெரிக்காவில் நடைபெறும் இந்த கிளப் உலகக் கோப்பையில் மொத்தம் 32 அணிகள் பங்குபெறுகின்றன. ஏ,பி, சி,டி, என மொத்தம் 8 குரூப்புகளாக ஒவ்வொரு குரூப்பிலும் தலா 4 அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் குரூப் ஏ பிரிவில் மெஸ்ஸியின் இண்டர் மியாமி அணி இருக்கிறது. ரியல் மாட்ரிட் குரூப் ஹெச், மான்செஸ்டர் சிட்டி குரூப் ஜி, இண்டர் மிலம் குரூப் இ, சாம்பியன்ஸ் டிராபி வென்ற பிஎஸ்ஜி குரூப் பி-யிலும் இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. முதல் போட்டியைப் பார்க்க 60,927 மக்கள் திடலுக்கு வந்திருந்தனர். அமெரிக்காவின் 11 நகரங்களில் 12 திடல்களில் இந்தப் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. ரொனால்டோ இல்லாததால் இந்தப் போட்டி அவ்வளவுக்கு முக்கியத்துவம் இல்லையென அவரது ரசிகர்கள் கருதுகிறார்கள்.

## வீடு, விவசாயத்துக்கு இலவச மின்சாரம்:
# மானியமாக ரூ. 15,785 கோடி வழங்கியது தமிழ்நாடு அரசு

**சென்னை, ஜூன் 16-**
வீடு, விவசாயத்துக்கு இலவசமாக வழங்கப்படும் மின்சாரத்துக்காக, 2024 - 25ல், 15,785 கோடி ரூபாயை, மின் கட்டண மானியமாக மின் வாரியத்திற்கு, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கி உள்ளது.

தமிழகத்தில் வீடுகளுக்கு, 100 யூனிட் வரை இலவசமாகவும், 500 யூனிட் வரை மானிய விலையிலும் மின்சாரம் வழங்கப்படுகிறது. விவசாயம், குடிசை வீடுகளுக்கு, முழுதும் இலவசமாகவும், விசைத்தறி உள்ளிட்ட பிரிவுகளுக்கு மானிய விலையிலும் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதற்காக மின்வாரியத்திற்கு ஏற்படும் செலவை, தமிழக அரசு மானியமாக வழங்குகிறது.

ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும், அந்த ஆண்டில் ஒவ்வொரு பிரிவுக்கும் எவ்வளவு மானியம் விடுவிக்க வேண்டும் என்பதை, மின்சார ஒழுங்குமுறை ஆணையம், உத்தேசமாக அரசுக்கு தெரிவிக்கும். பின், நிதியாண்டு முடிவடைந்ததும், துல்லியமான மானியம் இறுதி செய்யப்படும். அதன்படி, 2024 - 25ல், 15,852 கோடி ரூபாயை, உத்தேச மானியமாக வழங்க ஆணையம் உத்தர விட்டது. இதை நான்கு தவணைகளாக அரசு வழங்கியுள்ளது.

மானிய ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், தற்போது, 15,785 கோடி ரூபாயை மானியமாக இறுதி செய்துள்ளது. எனவே, கூடுதலாக வசூலிக்கப்பட்ட, 67 கோடி ரூபாயை, நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டிற்கு பெற வேண்டிய மானியத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு, மின்வாரியத்துக்கு தெரிவித்துள்ளது.

## குரூப் 1 மற்றும் குரூப் 1 ஏ முதல் நிலை
# தேர்வு முடிவுகள் இன்னும் 2 மாதங்களுக்குள் வெளியீடு
## டி.என்.பி.எஸ்.சி. தலைவர் தகவல்



**சென்னை, ஜூன் 16-**
குரூப் 1 மற்றும் குரூப் 1 ஏ முதல் நிலை தேர்வு முடிவுகள் இன்னும் 2 மாதங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் வெளியிடப்படும் என்று டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையமான டி.என்.பி.எஸ்.சி. சார்பில் குரூப் 1 பதவியில் காலியாக உள்ள 70 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு கடந்த ஏப்ரல் 1-ந்தேதி வெளியிடப்பட்டது. இதில், துணை கலெக்டர் பதவிக்கு 28 இடங்கள், போலீஸ் டி.எஸ்.பி. பதவிக்கு 7 இடங்கள், வணிக வரி உதவி ஆணையர் பதவிக்கு 19 இடங்கள், ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் பதவிக்கு 7 இடங்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி பதவிக்கு 3 இடங்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் பதவிக்கு 6 இடங்கள் ஆகிய 70 பணியிடங்கள் அடங்கும். அதோடு உதவி வன பாதுகாவலர் பதவிக்கு 2 காலியிடங்களுக்கான குரூப் 1 ஏ அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

இந்த தேர்வை எழுத ஏராளமான பட்டதாரிகள் போட்டி போட்டு விண்ணப்பித்தனர். குரூப் 1, குரூப் 1 ஏ தேர்வுகளை எழுத மொத்தம் 2 லட்சத்து 49 ஆயிரத்து 296 பேர் விண்ணப்பித்தனர். குரூப் 1 தேர்வை எழுத 2 லட்சத்து 27 ஆயிரத்து 982 பேரும், குரூப் 1 ஏ தேர்வை எழுத 6,465 பேரும் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் குரூப் 1 மற்றும் குரூப் 1 ஏ முதல் நிலை தேர்வு நேற்று நடந்தது. இதற்காக தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்கள் மற்றும் 6 தாலுகா மையங்கள் என 44 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. சென்னையில் மட்டும் குரூப் 1 முதல்நிலை தேர்வை 41,094 பேர் எழுதினார்கள். இதற்காக சென்னையில் 170 தேர்வு அறைகள் அமைக்கப்பட்டு இருந்தன.

தேர்வாணைய இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஹால் டிக்கெட்டை கொண்டு வந்தவர்கள் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். மேலும் தேர்வு எழுத வந்தவர்கள் ஆதார் அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், பான்கார்டு, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் நகலை எடுத்து வந்து காண்பித்து தேர்வு எழுத சென்றனர்.

தேர்வு எழுத வந்த மாணவர்கள் காலை 8.30 மணி முதல் தேர்வு எழுதும் மையங்களுக்கு வரத் தொடங்கினார்கள். தேர்வு எழுத வந்தவர்கள் காலை 9 மணி வரை மட்டுமே தேர்வு மையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். தேர்வு தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வு மையத்தின் அனைத்து நுழைவு வாயில்களும் மூடப்பட்டன. அதன் பிறகு வந்தவர்கள் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை.

மேலும், தேர்வு மையங்களுக்குள் செல்போன், கால்குலேட்டர், ஸ்மார்ட் கைக்கடிகாரம் உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்த தேர்வை கண்காணிக்கும் பணியில் 987 முதன்மை கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

குரூப் 1 தேர்வு தொடர்பாக டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் கூறியதாவது:- நேற்று குரூப் 1 மற்றும் குரூப் 1 ஏ முதல் நிலை தேர்வு எழுதியவர்கள் கால தாமதம் இன்றி முன்கூட்டியே தேர்வு மையங்களுக்கு வரவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருந்தது. அதன்படி தேர்வு எழுதியவர்கள் முன்கூட்டியே தேர்வு மையங்களுக்கு வந்து விட்டனர். டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகள் தற்போது எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முறை மிகவும் எளிமைப்படுத்தபட்ட ஓ.எம்.ஆர். ஷீட் வழங்கப்பட்டு உள்ளது. குரூப் 1 மற்றும் குரூப் 1 ஏ முதல் நிலை தேர்வு முடிவுகள் இன்னும் 2 மாதங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் வெளியிடப்படும். மெயின் தேர்வு அதில் இருந்து 3 மாதங்களுக்குள் நடத்தப்படும்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடந்த ஆண்டு 10,701 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு ஜனவரி முதல் இப்போது வரை 10,227 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. இப்போது நடந்து வரும் தேர்வுகள், இனிமேல் நடைபெற உள்ள தேர்வுகள் மூலம் 12,231 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## டெஸ்ட் கிரிக்கெட் போட்டி:
# முதலிடத்தில் இணைந்த பவுமா



**லண்டன், ஜூன் 16-**
டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான மாபெரும் சாதனை பட்டியலில் தென் ஆப்பிரிக்க அணி கேப்டன் பவுமா முதலிடத்தை பிடித்துள்ளார்.

**வெற்றி இலக்காக...**
ஆஸ்திரேலியா-தென் ஆப்பிரிக்கா அணிகள் இடையிலான 3-வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி லண்டன் லார்ட்சில் கடந்த 11-ந் தேதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் முறையே ஆஸ்திரேலியா 212 ரன்களும், தென் ஆப்பிரிக்கா 138 ரன்களும் எடுத்தன. பின்னர் 74 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை ஆடிய ஆஸ்திரேலிய அணி 65 ஓவர்களில் 207 ரன்னுக்கு ஆல்-அவுட் ஆனது. இதன் மூலம் தென் ஆப்பிரிக்க அணிக்கு ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

**ஆட்ட நாயகன் விருது...**
இதனையடுத்து 282 ரன்கள் இலக்கை நோக்கி 2-வது இன்னிங்சை ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 83.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 282 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தென் ஆப்பிரிக்க தரப்பில் அதிகபட்சமாக மார்க்ரம் 136 ரன்களும், கேப்டன் பவுமா 66 ரன்களும் அடித்தனர். ஆஸ்திரேலிய அணி தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 3 விக்கெட்டும், கம்மின்ஸ், ஹேசில்வுட் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். தென் ஆப்பிரிக்க வீரர் மார்க்ரம் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

**பெர்சி சாப்மேனுடன்...**
தென் ஆப்பிரிக்க அணிக்காக இதுவரை 10 டெஸ்ட் போட்டிகளில் கேப்டனாக செயல்பட்டுள்ள பவுமா அதில் 9 வெற்றிகள் பெற்றுள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல் 10 போட்டிகளில் அதிக வெற்றிகள் பெற்ற கேப்டன்களின் மாபெரும் சாதனை பட்டியலில் பெர்சி சாப்மேன் (இங்கிலாந்து) உடன் முதலிடத்தில் இணைந்துள்ளார்.


# இந்தியா - நியூசி., தொடர் போட்டி நடைபெறும் இடங்கள் அறிவிப்பு

**புதுடெல்லி, ஜூன் 16-**
நியூசிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகிறது. இந்நிலையில், போட்டி நடைபெறும் இடங்களை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

**சுற்றுப்பயணம்...**
நியூசிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒரு நாள் போட்டி மற்றும் 5 டி20 போட்டிகளில் விளையாடுகிறது. 20 ஓவர் உலக கோப்பைக்கு முன்பு இந்த தொடர் நடைபெறுகிறது. ஜனவரி 11-ந்தேதி இந்த போட்டி தொடர் தொடங்குகிறது. இந்த நிலையில் இந்தியா-நியூசிலாந்து மோதும் போட்டிகளுக்கான இடங்களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (ஐ.சி.சி) அறிவித்துள்ளது.

**போட்டி இடங்கள்...**
அதன்படி பரோடா, ராஜ்கோட், இந்தூர் ஆகிய இடங்களில் ஒருநாள் போட்டிகளும், நாக்பூர், ராய்ப்பூர், கவுகாத்தி, விசாகப்பட்டினம், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் டி20 ஆட்டங்களும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி, பெரியதாழை அருகே
# தடையை மீறி பனை மரம் ஏறி கள் இறக்கினார் சீமான்



**தூத்துக்குடி, ஜூன் 16-**
தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை அருகே பனைமரத்தில் ஏறி, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கள் இறக்கினார்.

விவசாயிகள் நலன் கருதியும், மரம் ஏறும் தொழிலாளர்கள் நலன் காக்கவும், கள் இறக்க அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. எனினும் இந்த கோரிக்கைக்கு முக்கிய அரசியல் கட்சிகள் மத்தியில் ஆதரவில்லை. ஆனால், நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான், கள் இறக்க அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில் நேற்று (ஜூன் 15) தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழை அருகே பனை மரத்தில் ஏறி கள் இறக்கும் போராட்டத்தை சீமான் அறிவித்து இருந்தார். அதன்படி நேற்று கட்சி நிர்வாகிகளுடன் சென்ற சீமான், பனைமரம் ஏறி, கள் இறக்கினார். இதில் கட்சி நிர்வாகிகள் மட்டுமின்றி, தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி உள்ளிட்டோரும் பங்கேற்றனர். பனை மரத்தில் இறக்கி வந்த கள்ளை அனைவருக்கும் சீமான் வழங்கினார். இந்த போராட்டத்தில் ஈடுபடுவதற்காக ஏற்கனவே பனை மரத்தில் ஏறி சீமான் பயிற்சி மேற்கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலது கையில் பலத்த காயம்:
# மே.இ.தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை தவறவிடும் ஸ்டீவ் ஸ்மித்

**லண்டன், ஜூன் 16-**
ஆஸ்திரேலிய அணி வெஸ்ட் இண்டீஸ்க்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ள நிலையில் கையில் காயம் காரணமாக வெஸ்ட் இண்டீஸ்-க்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஸ்டீவ் ஸ்மித் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா இடையே உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தென் ஆப்பிரிக்க அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.

இந்த ஆட்டத்தில் ஸ்டீவ் ஸ்மித்திற்கு கையில் காயம் ஏற்பட்டது. ஸ்டார்க் வீசிய பந்தை தென் ஆப்பிக்க கேப்டன் பவுமா விளாச முற்பட்டார். அப்போது, அந்த பந்து ஸ்லிப்பில் கேட்ச் நோக்கி சென்றது. ஸ்லிப்பாக ஸ்டீவ் ஸ்மித் செயல்பட்ட நிலையில் அவர் அந்த கேட்சை பிடிக்க முயன்றார். ஆனால், பந்து ஸ்மித்தின் வலது கையில் வேகமாக பட்டு கீழே விழுந்தது.

ஆஸ்திரேலிய அணி அடுத்ததாக வெஸ்ட் இண்டீஸ்க்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 25ம் தேதி தொடங்குகிறது. இந்நிலையில், ஸ்டீவ் ஸ்மித்திற்கு ஏற்பட்ட காயம் குணமாக சுமார் 6 மாத காலம் ஆகும் என தகவல் வெளியாகி உள்ளது. இதன் காரணமாக வெஸ்ட் இண்டீஸ்க்கு எதிரான டெஸ்ட் தொடரை அவர் தவறவிட உள்ளதாக கூறப்படுகிறது.

# உ.பி.யில் ராக்கெட் ஏவும் சோதனை வெற்றிகரமாக நடத்தியது இஸ்ரோ

**லக்னோ, ஜூன் 16-**
உத்தரபிரதேசத்தில் முதல் முறையாக ராக்கெட் ஏவும் சோதனையை வெற்றிகரமாக இஸ்ரோ நிகழ்த்தி உள்ளது.

இந்தியாவில் மொத்தம் 3 இடங்களில் ராக்கெட் ஏவுதளங்கள் உள்ளன. திருவனந்தபுரம் (தும்பா), சந்திப்பூர் (ஒடிசா மாநிலம்), ஸ்ரீஹரிகோட்டா ஆகிய 3 இடங்களில் அமைந்துள்ளது. இது மட்டுமின்றி, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து ட்ரோன் உதவியுடன் ராக்கெட் ஏவும் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது முதல் முறையாக, உத்தரபிரதேசம் மாநிலம், குஷிநகரில் ராக்கெட் ஏவும் சோதனையை இஸ்ரோ நிகழ்த்தி உள்ளது.

இது குறித்து இஸ்ரோ விஞ்ஞானி அபிஷேக் சிங் கூறியதாவது: அகமதாபாத்தில் ட்ரோன்களைப் பயன்படுத்தி ராக்கெட் ஏவும் சோதனை நடத்தினோம். தற்போது உத்தரபிரதேசத்தில் ஒரு ராக்கெட் மூலம் ஒரு செயற்கைக்கோள் நேரடியாக ஏவப்பட்டது இதுவே முதல் முறை. இந்த சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது.

த்ரஸ்ட் டெக் இந்தியா லிமிடெட் உடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த சோதனையில், 15 கிலோ எடையுள்ள ராக்கெட் 1.1 கிலோ மீட்டர் உயரத்திற்கு பறந்து பாதுகாப்பாக தரையில் இறங்கியது. வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் 900 இளைஞர்களால் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோளை விண்ணில் ஏவி சோதிக்க உள்ளோம் என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 16.06.2025 முதல் 22.06.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் எதிர்பாராத விதமாக வீட்டு செலவுகள் அதிகரிக்கும். பின்னர், திருமகளின் கருணையால் ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக அமைந்து மனமகிழ்ச்சி தரும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய இருசக்கர வாகனம் வாங்க முயற்சி எடுப்பீர்கள். பல வழிகளில் உங்களை நீங்கள் அழகுபடுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்குத் தங்கள் குடும்பத்தையும், பணியையும் ஒரு சேர பார்ப்பதில் இடைஞ்சல்கள் ஏற்படும். ஓய்வின்றி, அடிக்கடி ஏற்படும் வெளியூர்ப் பயணங்கள் மூலம் அசதி ஏற்படும். மிகப் பிரபலமான நபர் சந்திப்பால், நீங்கள் விரும்பிய இடத்திற்கு, இடமாற்றம் பெறுவீர்கள்.

பரணி --

இந்த வாரம் அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனுகூலமாக இருக்கும். உறவுகள் மற்றும் நண்பர்கள், தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டுவார்கள். மேடைப்பேச்சு, பட்டிமன்றப் பேச்சாளர்களுக்கு முன்னேற்றமான வாரம். அன்னையின் அரவணைப்பில் அகம் மகிழும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். தங்கம், வெள்ளி, துணி, ஆயத்த ஆடைகள், புத்தகங்கள், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் ஆகிய வியாபாரத்தில் நல்ல ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். பெற்றோர்களின் உடல்நிலை சீராக இருக்காது. இல்லத்தில் இனிய சுபகாரியங்கள் நடைபெறும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி கரமான சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். விருந்தினர் வருகை ஆனந்தம் அளித்தாலும், செலவுகள் அதிகரிக்கும். கல்வியில் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டியதிருக்கும். மிகவும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதால் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் சுறுசுறுப்பு மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். செல்வாக்கு மிக்கவர்கள் புதிய நட்பால் உங்கள் எதிர்காலம் ஒளிமிகுந்த தாகும். சிலருக்குப் பதவி உயர்வுடன் கூடிய பணி மாற்றங்கள் ஏற்படலாம். அதன் காரணமாக குடும்பத்தை விட்டுப் பிரியும் நிலை ஏற்படலாம். பெற்றோர்கள் தங்களின் உயர்வு கண்டு உள்ளம் மகிழ்வர்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் உங்கள் உற்றார் உறவினர் ஆகியோர், உங்கள் அசாத்திய முன்னேற்றம் கண்டு பெருமிதம் கொள்வர். எல்லாக் காரியங்களும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். அரசு மூலம் வரவேண்டிய அனைத்து பண நிலுவைகள் அதிகாரிகள் பலத்த சிபாரிசின் மூலம் கிடைத்துவிடும். வியாபாரத்தில் அதிக இலாபங்கள் உண்டாகும். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். கேளிக்கை விடுதிகளில், ஆரவாரம் மிக்க சூழலில், மகிழ்ச்சி பொங்க, விருந்துகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

ரோகிணி –

இந்த வாரம் பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். குழந்தைகளின் பிடிவாத குணத்தால் தொல்லை ஏற்படும். வீடு மாற்றம், தொழில் மாற்றம் என வாழ்க்கையில் ஏதேனும் ஒரு மாற்றம் ஏற்படும். வியாபாரிகள் புதிய யுக்திகளை பயன்படுத்தி, வாடிக்கையாளர்களை கவர்ந்து, அதிக இலாபம் பெற முயற்சி செய்வீர்கள். அலுவலகத்தில் உயர் அதிகாரிகளின் ஆலோசனைப்படி நடப்பதும், அவர்கள் சொல்லுக்கு மறு பேச்சு பேசாமல் பணிந்து நடப்பது பணியில் முன்னேற்றங்களைத் தரும். தாய்வழி உறவுகளால் சந்தோஷங்கள் ஏற்படும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் மனதில் நினைத்தது நினைத்தபடி நடக்கும். வீட்டு விசேஷங்களுக்கு வெளியில் அலைந்து திரியும் நிலை ஏற்படும். உடன் பிறப்புக்களின் நடவடிக்கைகள் வெறுப்பை ஏற்படுத்தும். தம்பதிகளிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து, ஒற்றுமை நிலவும். பணிபுரியும் இடங்களில் வேலைப்பளு அதிகமானாலும், அதற்கேற்ற ஆதாயம் இருக்கும். ஒரு சிலருக்கு உழைப்பின் காரணமாக, அசதியும், உடல் பாதிப்பும் ஏற்படலாம். தொழில் வகையில் ஏற்ற, இறக்கங்கள் இருந்தாலும் ஓரளவு சமாளித்து விடுவார்கள். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த தனவரவு இல்லாமல் வங்கியில் ஓவர் டிராப்ட் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் பிறர் உங்களை புகழ வேண்டும் என்பதற்காக, கடினமான காரியங்களையும் இழுத்துப் போட்டுச் செய்வார்கள். அதேபோல் பணியிடத்தில் அதிகாரிகள் பாராட்டைப் பெறுவார்கள். காவல்துறை, இராணுவம் போன்ற சீருடைப் பணியாளர்களுக்கு சீரிய சேவைக்கான பதக்கங்கள், பாராட்டுக்கள் கிடைக்கும். விபத்துக்களை தவிர்க்க வாகனங்களை இயக்கும் போது அதிக கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இயக்கவும். மாணவர்கள் புதிய கல்லூரிகளில் சேர்ந்து, கல்வியில் சிறப்புற்று, உயர்ந்த நிலையை அடைவார்கள். (ஹை ரேங்க்). குடும்பத்தில் குழப்பங்கள் தீர்ந்து குதூகலம் உண்டாகும். மனைவி, குழந்தைகளின் மன விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

திருவாதிரை —

இந்த வாரம் இளைஞர்கள் நண்பர்களுடன் பார்ட்டி களுக்குச் சென்று மகிழ்வீர்கள். புது மாடல் இருசக்கர வாகனத்தை வாங்க முயற்சி செய்வீர்கள். நெடுநாட்களாக பெண் தேடி அலைந்தவர் களுக்கு திருமணம் உறுதியாகி, அதன் காரணமாக ஆகாயத்தில் மிதப்பார்கள். உங்கள் அன்பு மிக்க செயல்களால், உறவுகள் மகிழ்ச்சி கொள்வார். புத்திர பாக்கியத் தால் ஒரு நபரை ரேஷன் கார்டில் சேர்க்கும் பாக்கியம் ஏற்படும். பணிபுரியும் பெண்கள் தங்கள் பணியிடத்தில் ஏற்படும் பிரச்சனைகளை தாங்களே சமாளித்துக் கொள்வர். என்ன சமாதான முயற்சிகள் மேற்கொண்டாலும், வீட்டில் எதிர்பாராத விதமாக ஏற்படும் சச்சரவுகள் சமாளிக்க முடியாமல் போகலாம்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் வாக்குவன்மை ஓங்கும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். உங்கள் அழகும் பொலிவும் கூடும். பெயரும், புகழும் ஓங்கும். அறிவுத்திறனும் கூடும். சிலர் பண விஷயங்களில் ஏமாற நேரலாம். எச்சரிக்கை தேவை. நல்லவர்களுடன் பழகுவது நல்லது. அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். திட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறக் காலதாமதம் ஆகலாம். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் கிடைக்கத் தாமதம் ஆகலாம்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் மனதில் புதிய வீடு, மனை ஆகியவை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மனோதைரியம் ஓங்கும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும், சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த ஆதாயம் இருக்கும். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய தொடர்புகள் மூலம் நன்மையும் ஏற்படும். மாணவர்களுக்கு கல்லூரிச் சூழல்கள் புதிய அனுபவங்களைத் தரும். சிலருக்குப் புதிய இட மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு அவர்களின் சீரிய உழைப்புக்காக அரசாங்க விருதுகள் கிடைக்கும். வியாபாரிகள் தங்கள் வாக்குவன்மையால் வியாபாரத்தில் அதிக இலாபம் ஈட்டுவது உறுதி.

பூசம் –

இந்த வாரம் ஆன்மிகப் பெரியவர்கள் தரிசனம் கிடைத்து, வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களும் கிடைக்கும். வீட்டில் தெய்வ வழிபாடு மற்றும் தெய்வீக கருத்துக்களைக் கேட்டல் என தெய்வீக வாரமாக அமையும். அதன் காரணமாக சங்கடங்கள் தீர்ந்து, மனதில் ஓர் ஏகாந்தமான அமைதி நிலவும். தனவரவு, கூட்டாளிகள் ஒத்துழைப்பு, எதிர்பாலர் சந்தோஷம், புகழ், கௌரவம், திருமணம் மற்றும் பெரியவர்கள் ஆசி ஆகியவை ஏற்படும். பணியில் முன்னேற்றம், கீழே பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பு ஆகியவை கிடைக்கும், வெளிநாட்டு வாசம் ஏற்படலாம். பெண்களால் இலாபம் உண்டு. தேவையற்ற பிரச்சனைகளை தவிர்க்க, உறவுகள் மத்தியில் வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.

ஆயில்யம் –

இந்த வாரம் தங்கு தடையின்றி தனவரவு ஏற்பட்டு, மனதில் மகிழ்ச்சி பொங்கும். பேரின்பம் பெறும் விதமாக மனைவி முழுசுகமாக இருக்கும் சேதி கேட்டு ஆகாயத்தில் மிதப்பது போல் ஆனந்தம் அதிகரிக்கும். மாபெரும் சபைகளில் மாலைகள் விழும் அளவுக்கு உங்கள் புகழ் ஓங்கும். பக்தி மேலீட்டால் பல திருப்பணிகள் செய்ய மனதில் நாட்டம் ஏற்படும். தெய்வ அருளால் வாழ்க்கையில் பல நல்ல திருப்பங்கள் ஏற்படும். சுற்றமும் நட்பும் சூழ சொகுசு வாகனத்தில் உல்லாச சுற்றுலா பயணங்கள் செல்வதன் காரணமாக உள்ளம் மகிழும். தொழிலைப் பொறுத்தவரை சிறு சிறு தடைகள் ஏற்படலாம். இடைவிடாத உழைப்பின் காரணமாக வேளா வேளைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் சொத்துக்கள் சேரும், தான தர்மத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் கஷ்டமும், சுகமும் மாறி மாறி வரும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். போட்டி பந்தயங்களில் வெற்றி உண்டு. புத்தக வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு முன்னேற்றம் இருக்கும். அரசுப் பணியில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு இருப்பதால் சமயம் பார்த்து உங்களுக்கு தேவையான வேலைகளை சாதித்துக் கொள்ளலாம். புதிய தொழில் முயற்சிகள் அரசுக் கடன் உதவியுடன் வெற்றி பெறும். குடும்பத்தில் பிரிந்த தம்பதிகள் இணைந்து பேரின்பம் அடைவது உறுதி.

பூரம் –

இந்த வாரம் திருமணம், சந்ததி விருத்தி ஆகியவை ஏற்படலாம். உடன்பிறப்புகள் நன்மைகள் உண்டு. சுபகாரியம் செலவுகள் ஏற்படும். பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். கௌரவப் பட்டங்கள் பதவிகள் கிடைக்கும். தங்கள் சேவைகள் உயர் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும். உங்கள் உயர்வைக் கண்டு பிறர் பொறாமை கொள்வர். சிலருக்கு உஷ்ண சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம். தலைமைப் பதவிகள் தேடிவரும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். உங்கள் மீது மிகவும் அன்பு செலுத்தும் பெண்களின் ஆதரவால் லாபம் ஏற்படும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் குடும்பத்தார் விரும்பிய பொருட்களை எல்லாம் உடனே வாங்கித் தருவீர்கள்.. சுகமும் ஆரோக்கியமும் பெருகும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்குத் தங்கள் விருப்பம் போல் உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். குழந்தைகளின் சுட்டித்தனம், சேட்டைகள் கண்டு மனமகிழ்ச்சி ஏற்படும். சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். மாணவர்களின் கல்லூரிக் கனவுகள் நிறைவேறும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த இடத்திலிருந்து எதிர்பார்த்த அளவுக்கு பண வருமானம் இருக்கும். உறவினர் வருகை, மூலம் மகிழ்ச்சி, சந்தோஷம் ஆகியவை ஏற்படும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். தந்தைக்கு நன்மைகள் ஏற்படும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையும். அரசு மரியாதை கிட்டும். உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும் அதன் மூலம் வருவாய் பெருக்கமும் ஏற்படும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களும், அதனால் ஆதாயங்களும் ஏற்பட்டு, எதிர்பாராத தன வரவுகள் கைக்கு வந்து சேரும். பணம் வந்தால் செலவுகளும் வரும் தானே ? வியாபாரிகளுக்கு வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கம் மூலம் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும், அதிகாரிகள் அனுசரணையால் வெற்றிகரமாக முடியும்.

அஸ்தம் –

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். சிலருக்குப் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். திடீர் பயணங்களால் ஆதாயம் ஏற்படலாம். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க நேரலாம். இடைவிடாத பணி காரணமாக நேரத்திற்கு உணவு உண்ண இயலாமல் போகும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பிரபலமானவர்களின் நட்பால் உங்களுக்கு வேண்டியதை சாதித்துக் கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு வங்கி மூலம் கடன் உதவிகள் சிறிது தாமதத்திற்கு பிறகு கிடைக்கும். சுற்றுலாத் தலங்களுக்கு குடும்பத்துடன் பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் வங்கிக் கணக்குகளில் கையிருப்பு கூடும். சிலருக்கு மனை வாங்கும் யோகம் ஏற்படும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். சிலர் நடக்கும் போது கீழே விழுந்து எழ நேரும். எனவே, எச்சரிக்கை தேவை. படிப்பைப் பொறுத்தவரை, உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அன்றாட வருமானத்தில் சீரான வளர்ச்சி இருக்கும். அரசு அதிகாரிகளுக்கு துணைபுரிய அநேக கீழ்நிலை உதவியாளர்கள் அமைவர். அரசு வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு அதற்கான அனுகூலமான பதில்கள் அரசிடமிருந்து கிடைக்கும். எழுத்தாளர்களுக்கு தங்கள் தொழிலில் ஏற்றம் ஏற்படும். ஆரோக்கியம் மேம்படும். வீண் சச்சரவுகளை விலைக்கு வாங்காதீர்கள்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள். அரசு பணிபுரியும் பெண்களுக்கு அலுவலகப் பணிகளில் தாமதங்கள் ஏற்படும் பணிச்சுமை கூடும்.

சுவாதி –

இந்த வாரம் பணவரவு மற்றும் இலாபங்கள் பெருகும். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். சுபகாரிய செலவுகள் ஏற்படும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தான தருமங்கள் செய்வார்கள். உங்கள் குழந்தைகளைக் கருணை உள்ளத்தோடு அணுகுங்கள். அவர்களுக்குத் தேவையானவற்றை மறுக்காமல் வாங்கிக் கொடுங்கள். அடிக்கடி வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்ள நேரும். புதிய தோழமைகள் கிடைக்கும். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். வியாபாரத்தில் மேற்கொள்ள நினைத்த முக்கியத் திட்டங்கள் நிறைவேறக் காலதாமதம் ஆகலாம்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். இனிப்பான நல்ல செய்திகள் வரும். எதிர்பாராத பணவரவு அதிகரிக்கும். பக்தி சொற்பொழிவுகள், பாடல்கள் கேட்பதில் ஆர்வம் எழும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவை ஏற்படும். தொழிலில் விரிவாக்கங்கள் செய்வதால் எதிர்பாராத அளவுக்கு அசாத்திய வளர்ச்சி ஏற்படும். தங்கள் சாமர்த்தியத்தால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வீர்கள்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். செல்வத்திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரித்து, இலாபமும் அதிகரிக்கும். அரசு சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் மெச்சப் படுவீர்கள். சிலருக்கு தலைவலி/கண்ணில் பிரச்சனைகள் வந்து சீராகிவிடும். கவலை வேண்டாம். பெண்கள் தங்கள் சேமிப்பை வைத்து புதிய ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபடாதிருப்பது இழப்பை தவிர்க்கும்.

அனுஷம் –

இந்த வாரம் பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றமும் ஏற்படும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக நமக்கு எல்லா நாட்களும் ஞாயிறாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. இந்த வாரம் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்படும் கடன் வாங்கும் நிலை ஏற்படலாம். நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் நல்ல ஊதியம் அளிக்கும். வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி அனுபவிப்பீர்கள்.

கேட்டை –

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடக்கும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும், தனசேர்க்கை ஆகியவற்றால் வரும் இன்பத்துக்கு அளவே இருக்காது.. சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாட்டப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். உங்கள் எண்ணமெல்லாம் பணத்தை பற்றியதாக இருக்கும். அரசு தொடர்பான விவகாரங்களில் தொல்லை ஏற்படும். தீயோர் தொடர்பு சஞ்சலம் ஏற்படும். புதிய திட்டங்களால் தொழிலில் இலாபம் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது வேகத்தை குறைத்து, எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புது தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். கௌரவம், பட்டம், பதவி ஆகியவை தேடிவரும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரிப்பதால் உள்ளம் மகிழும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் அசாத்திய வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் அனுகூல தால் உயர் பதவிக்கான சிபாரிசுகள் மேற்கொள்ளப்படும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

பூராடம் –

இந்த வாரம் எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமான வாங்குவீர்கள். ஆரவாரம் மிக்க சூழலில், கேளிக்கை விருந்து கள் மற்றும் பெண்களின் அருகாமை ஆனந்தமளிக்கும். நல்ல பண்பாளர்களின் தொடர்புகள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை அடைவீர்கள். மனதில் ஏற்படும் தெய்வ சிந்தனையால் மனநிம்மதி கூடும். சோதனைகள் அனைத்தையும் சாதனைகள் ஆக்குவார்கள். பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். பங்களா போன்ற பெரிய வீடு கிடைக்கும். சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் பெண்களின் வாழ்க்கையில் சுயமான முன்னேற்றம் நிலவும். பக்தி மார்க்கத்தில் தீவிர ஈடுபாடு உண்டாகும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய வசதி வாய்ப்புகள் உருவாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் அதிக இலாபம் கிடைக்கும். கூட்டு வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் எச்சரிக்கை தேவை. இந்த வாரம் காரியத் தடைகள், வழக்கு வியாஜ்ஜியங்கள் ஏற்படலாம். அவற்றை சில காலம் ஒத்தி போடுவது நல்லது மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படும். வீண் ஆசைகளை விலக்கி வைப்பது நல்லது. விவசாயிகளுக்கு வளம் கொழிக்கும் வயல்களில் வசதிகள் பெருகும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அனைத்து காரியங்களிலும் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். தூரப் பயணங்கள் செல்லும் போது எச்சரிக்கை தேவை. உங்களுக்கு உழைப்பு அதிகமாகி. அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்காது. ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு மற்றும் செயல்திறன் அதிகரிக்கும். மதிப்பும், அந்தஸ்து உயரும். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும்.

திருவோணம்-

இந்த வாரம் பல வகையான உயர்ந்த வாகன வசதிகள் அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். சொற்பொழிவுத் திறன் அதிகரிக்கும். சிலருக்குப் புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். அரசு பதவியில் உள்ளவர்கள் வேண்டியவர்களாக அவர்களால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை வரவுகள் அதிகமாக திருப்திகரமான வாரமாக இருக்கும். நீண்ட நாளாக வராத கடன் பாக்கிகள் வசூலாகும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உபகாரங்கள் தடைப்படாது. எடுத்த புதிய முயற்சிகள் யாவும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் குடும்பத்தில் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். இல்லத்தில் மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் நடக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் பெற்றோர்களால் மேற்கொள்ளப்படும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். அதன், காரணமாகத் தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். நல்ல விஷயங்களுக்காக அலைச்சல்கள் ஏற்படும். நெடுந்தூரப் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்கு அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று நடக்கும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். சிலருக்கு தெய்வ சங்கல்பத்தால் புத்திர பாக்கியம் ஏற்படும் வழி பிறக்கும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பல திசைகளில் இருந்தும் பணம் வரலாம். தங்கள் வாக்கு வன்மை மற்றும் சிறந்த பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். தானிய உற்பத்தி பெருகி விவசாயிகளுக்குத் தனவரவு திருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீணான வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். அரசுப் பணியாளர்களுக்கு தாமதமான பதவி உயர்வுகள் துறை அதிகாரிகள் ஆதரவால் விரைவில் கிடைக்கும். நோட்டுப் புத்தக, ஜெனரல் ஸ்டோர் வியாபாரிகளுக்கு பொன்னான காலம் ஆகும்.

சதயம்-

இந்த வாரம் உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். உங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வார இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். குடும்ப விழாக்கள், சந்தோஷத் தருணங்களாக அமையும். மனைவியுடன் உறவு சீராக, மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். முன்னர் சேமித்த சேமிப்பு களின் பலனைத் தற்போது அறுவடை செய்வீர்கள். அரசு வகை ஆதாயம் ஏற்படும். வங்கிகள் மூலம் கிடைக்கும் உதவிகளால் புதிதாக தொழில் தொடங்கி ஆதாயம் காணும் நிலை ஏற்படலாம். பெண்கள் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான செய்தி பெறுவர்.. வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் மனைவிமார்கள் தங்கள் கணவரிடம் இருந்து உண்மைக் காதலையும், உன்னத அன்பையும் பெறுவர். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், புதிய பதவிகள் தேடிவரும். பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். பங்குச் சந்தையில் ஆலோசித்து முதலீடு செய்வது இழப்பைக் குறைக்கும். தொழிலில் உங்கள் கூட்டாளிகளின் கடின உழைப்பு மெச்சத் தக்கதாகவும், திருப்தி கரமாகவும் இருக்கும். புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு வங்கிக் கடன்கள் சிரமமின்றி கிடைக்கும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரித்து, உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல் இருந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் வாசல் வந்து நிற்கும்.. மனக்கவலைகள் மனைவியின் அரவணைப்பால் குறையும். . பெண்களால் முழுமையாக சந்தோஷம் இருக்கும். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளுங்கள்.. உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் வளர்ச்சி மற்றும் நல்ல முன்னேற்றத்துக்கான காலம் இது. சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். உறவுகளிடம் கருத்து முரண்பாடுகளை தவிர்த்தால் நிம்மதி பிறக்கும் வாகனங்களில் எச்சரிக்கையுடன் செல்லவும்.

ரேவதி-

இந்த வாரம் தனச்சேர்க்கை உண்டு. பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். குடும்ப உறவுகளின் பரிபூர்ண ஒத்துழைப்புக் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல ஆதாயம் பெற, புதிய திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்வார்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். வங்கிக் கணக்கில் ரொக்க இருப்பு கூடும். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் எளிதில் கைகூடும். பயிர் விளைச்சல்கள் அதிகரிக்கும் சூழ்நிலைகள் உருவாகும். பழைய நண்பர் ஒருவரின் வரவு அந்த நாள் ஞாபகங்கள் நினைவுறுத்தி மகிழ்விக்கும். மனம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும்.. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் குறி காட்டப்படுகிறது. வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள்.



தஞ்சாவூர் மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக நேற்று திருச்சி விமான நிலையத்திற்கு வருகை புரிந்தபோது உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வரவேற்றார்.



திருச்சி கல்லணையில் காவிரி உபவடி நிலப்பகுதி மற்றும் கல்லணை கால்வாய் ஆகியவற்றின் பாசன உள்கட்டமைப்புகளில் விரிவுப்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது குறித்த புகைப்பட காட்சிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, கோவி.செழியன், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா, எஸ்.முரசொலி, துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கலெக்டர் பிரியங்கா பங்கஜம் உள்ளனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக திருச்சிக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று திருச்சி விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## வெடி விபத்து மற்றும் நீரில் மூழ்கி பலியான

# பெண் மற்றும் பள்ளி மாணவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி

சென்னை, ஜூன் 16-

கடலூர் மாவட்டம் பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலியான பெண் மற்றும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடியில் ஏரியில் மூழ்கி பலியான பள்ளி மாணவரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், பெரியகுமட்டி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (15.06.2025) காலை சுமார் 11.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் புவனகிரி வட்டம், சின்னக்குமட்டி கிராமம், நடுத்தெருவைச் சேர்ந்த லதாகுமாரி (வயது 37) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 4 லட்சம் ரூபாய் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடியில் ஏரியில் மூழ்கி பலியான பள்ளி மாணவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், பார்வதிபுரம் கிராமம், சவேரியார் நகரைச் சேர்ந்த வின்சென்ட் அமல்ராஜ் அந்தோணி என்பவரின் மகன் அப்டேல் டெவின் ரோஜர் (வயது 17) என்பவர் நேற்று முன்தினம் (14.6.2025) மாலை சுமார் 5.00 மணியளவில் பார்வதிபுரம் கிராமத்திலுள்ள வெங்கலத்து ஏரியில் நண்பர்களுடன் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இஸ்ரேல்-ஈரான் இடையே... (1-ம் பக்க தொடர்ச்சி)

இஸ்ரேலின் இந்த தாக்குதலுக்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், இரு நாடுகளும் விரைவில் போர் நிறுத்தம் செய்யுமாறும் வலியுறுத்தி உள்ளன. இரு நாடுகளுக்கு இடையேயான இந்த தாக்குதலால் மத்திய கிழக்கு வழியான விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இரு நாடுகளும் தங்கள் வான்பகுதியை மூடியுள்ள நிலையில் சர்வதேச நாடுகளின் விமானங்கள் அந்த வழியான போக்குவரத்தை ரத்து செய்துள்ளன.

மறுபுறம் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என இஸ்ரேல் எச்சரித்து உள்ளது.

இல்லையென்றால் டெஹ்ரானை எரித்து விடுவோம் என அந்த நாட்டு ராணுவ மந்திரி கேட்ஸ் மிரட்டல் விடுத்து உள்ளார். இதன்படி தங்கள் போர் விமானங்கள் ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்பை உடைத்துக்கொண்டு எளிதாக டெஹ்ரானை அடைந்து வருவதாகவும் இஸ்ரேல் தெரிவித்து வருகிறது.

இவ்வாறு இஸ்ரேலும், ஈரானும் தங்கள் தாக்குதலை தொடர்வதில் உறுதியாக இருப்பதால் மத்திய கிழக்கில் உச்சக்கட்ட போர்ப்பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் வீசிய ஏவுகணையால் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் இரண்டு முக்கிய எண்ணெய்க் கிடங்குகள் பற்றி எரிந்து வருவதாக ஈரானிய எண்ணெய் அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

ஈரானிய எண்ணெய் அமைச்சகத்தின் தகவல்படி, டெஹ்ரானின் வடமேற்கே உள்ள ஷாஹ்ரானில் உள்ள எண்ணெய் கிடங்குகளும், நகரத்திற்கு தெற்கே உள்ள மற்றொன்றும் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை விமான நிலையத்தில் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரை நேற்று ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் வரவேற்றார். அருகில் கவர்னர் ஆர்.என்.ரவி, மேயர் ஆர்.பிரியா, பாராளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, கனிமொழி சோமு, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.



தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து நேற்று அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, பி.மூர்த்தி ஆகியோர் இருபோக பாசனத்தின் முதல்போக பாசனத்திற்கான தண்ணீரை திறந்து வைத்தனர். உடன் தேனி மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத்சிங், மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா, திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் செ.சரவணன், தங்கத்தமிழ்செல்வன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் என்.இராமகிருஷ்ணன், கே.எஸ்.சரவணக்குமார், ஆ.மகாராஜன், ஆ.வெங்கடேசன் உடனிருந்தனர்.

## மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக

# வைகை அணையில் தண்ணீர் திறப்பு

ஆண்டிப்பட்டி, ஜூன்16-

மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக 120 நாட்களுக்கு வைகை அணையில் இருந்து நீரை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார். இதன் மூலம் மதுரை, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 45 ஆயிரத்து 41 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் என்று பொதுப்பணி துறையினர் தெரிவித்துள்ளனர்.

தேனி மாவட்டம் முழுவதும் தென் மேற்கு பருவ மழை பரவலாக பெய்து வருகிறது. இதேபோல் முல்லைப் பெரியாறு நீர்பிடிப்பு பகுதிகளிலும் தொடர் மழை பெய்தது. இதைத்தொடர்ந்து அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. எனவே அணையில் இருந்து தமிழக பகுதிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. இதன் காரணமாக 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் 60 அடியாக உயர்ந்தது.

அணையில் போதுமான நீர் இருப்பு உள்ளதால் வைகை அணையில் இருந்து மதுரை, திண்டுக்கல் மாவட்ட பகுதிகளுக்கு முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதன் பேரில் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது. அதன்படி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

அமைச்சர்கள் இ.பெரியசாமி, மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு தண்ணீரை திறந்து வைத்தனர். இதனைத் தொடர்ந்து விநாடிக்கு 900 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

நேற்று முதல் 120 நாட்களுக்கு முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட உள்ளது. முதல் 75 நாட்களுக்கு தொடர்ச்சியாகவும், மீதம் உள்ள 45 நாட்களுக்கு தண்ணீரின் இருப்பை பொறுத்து முறை வைத்தும் தண்ணீர் திறக்கப்படுகிறது. தற்போது திறக்கப்பட உள்ள தண்ணீரின் மூலம் மதுரை, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 45 ஆயிரத்து 41 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் என்று பொதுப்பணி துறையினர் தெரிவித்துள்ளனர்.

## உத்தராகண்ட் மாநிலம் கேதார்நாத் அருகே

# ஹெலிகாப்டர் விபத்தில் 7 பேர் பலி

புதுடெல்லி, ஜூன் 16-

உத்தராகண்ட் மாநிலம் கேதார்நாத்தில் இருந்து புறப்பட்ட ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கிய விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். மோசமான வானிலை காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

உத்தராகண்ட் மாநிலத்தின் புனிதத்தலமான கேதார்நாத்தில் இருந்து ஒரு ஹெலிகாப்டர் நேற்று குப்தகாஷிக்கு அதிகாலை 5.30 மணிக்கு கிளம்பியது. இந்த ஹெலிகாப்டர் அதிகாலை 6.00 மணியளவில் ருத்ரபிரயாகையை கடக்க முயன்றபோது பெரும் விபத்துக்குள்ளானது. ருத்ரபிரயாகின் கவுரிகுண்ட் வனப்பகுதியில் அந்த ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கியதில், ஹெலிகாப்டர் விமானி, பயணிகள் என 7 பேர் பலியாகினர்.

இந்தத் தகவல் கிடைத்ததும், தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை குழுக்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆரியன் எனும் தனியார் நிறுவனத்திற்கு இந்த ஹெலிகாப்டர் சொந்தமானது.

இந்த விபத்து, மோசமான வானிலை காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. நேற்று அதே ஹெலிகாப்டர் குப்தகாஷியில் இந்து யாத்ரீகர்களுடன் கேதார்நாத்துக்கு பறந்துள்ளது. அனைவரையும் பத்திரமாக இறக்கிய பின் வேறு யாத்ரீகர்களுடன் குப்தகாஷிக்கு திரும்பியபோது இந்த சோக விபத்து நிகழ்ந்துள்ளது.

முன்னதாக, இம்மாதம் ஏழாம் தேதி ருத்ரபிரயாக்கில் ஒரு ஹெலிகாப்டரின் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. கேதார்நாத்துக்கு கிளம்பிச் சென்ற இந்த ஹெலிகாப்டர் நெடுஞ்சாலையில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. அந்த ஹெலிகாப்டரில் இருந்த அனைத்து யாத்ரீகர்களும் விமானிகளும் பாதுகாப்பாக இருந்தனர்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அவசரமாக சிர்சி அருகே உள்ள நெடுஞ்சாலையில் தரையிறக்க வேண்டியிருந்தது. அந்த ஹெலிகாப்டரில் விமானி உட்பட 6 பேர் இருந்தனர்,

அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பி இருந்தனர். லேசான காயமடைந்த விமானி மருத்துவமனை சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது



தமிழக வெற்றிக்கழகம் சார்பில் மாமல்லபுரம் தனியார் ஓட்டலில் நேற்று நடந்த மாணவர்களுக்கான 4-ம் கட்ட மற்றும் இறுதிக்கட்ட கல்வி விருது வழங்கும் விழாவில் த.வெ.க. தலைவர் விஜய்க்கு, பாராட்டு சான்றிதழ் பெற்ற மாணவரின் தம்பி முத்தமிட்ட காட்சி. அருகில் மாணவனின் பெற்றோர் உள்ளனர்.